

# MPEDA

## நியூஸ் லெட்டர்

தொகுப்பு 1/எண். 2/ பிப்ரவரி 2018

**PAGE 04**

டிசம்பர் 2017ல் அமெரிக்காவிற்கான இறால் இறக்குமதி

**PAGE 15**

நீலக்கால் நண்டின் நிலைப்பாட்டிற்கான திட்டம்

**PAGE 22**

கடலிலிருந்து பிளாஸ்டிக்கை அகற்றுவதற்கான 'சுசித்வா-சாகரம்' திட்டம்

ISSN 0245-7059

www.mpeda.gov.in

# உள்ளே...


தொகுப்பு 1/எண். 2/ பிப்ரவரி 2018

**03**
டிசம்பர் 2017-ல் அமெரிக்காவிற்கான இறால் இறக்குமதி

**05**
கொச்சியில் அமோகமான சஃபாரி 2 எக்ஸ்போ



**14**
நீளக்கால் நண்டின் நிலைப்பாட்டிற்கான திட்டம்



**19**
கடல் பாதுகாப்பு : ஒரு சமுதாயம் சார்ந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி



**21**
கடலிலிருந்து பிளாஸ்டிக்களை அகற்ற 'சுசித்வா சாகரம்' திட்டம்

**24**
புவனேஷ்வரில் மேம்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்



**27**
படகுப் பயணத்தின்போது சாஷ்மி ரக சூரை மீன்களை கையாளும் பயிற்சி

**28**
ஏற்றுமதி தொடர்பான மீன் வளர்ப்பு பண்ணைகளுக்கு ஜி.பி.எஸ். வசதியை எம்.பி.டி.இ.எ. துவக்கியது



**30**
சூழலுக்கேற்ற நீடித்த மீன் வளர்ப்பு வாய்ப்புகளுக்கான பயிற்சி



**42**
ஒடிசா மீனவர்களைக் கவர்ந்த ஜிலேப்பி கெண்டை மீன்



**COVER IMAGE** : Fishing activity in Goan village Beach
**PHOTO** : Rejeesh Bhaskaran

MPEDA நியூஸ் லெட்டர்
தொகுப்பு 1/எண். 2/ பிப்ரவரி 2018

**ஆசிரியர் குழு**

**திரு. T. டோலா சங்கர், IOFS**
இயக்குனர் (மார்க்கெட்டிங்)

**திரு. B. ஸ்ரீகுமார்**
செயலாளர்

**திருமதி. ஆஷா C. பரமேஸ்வரன்**
இணை இயக்குனர் (தரக்கட்டுப்பாடு)

**திரு. P. அனில்குமார்**
இணை இயக்குனர் (மீன்வளம்)

**திரு. K.V. பிரேம்தேவ்**
துணை இயக்குனர் (எம்.பி)

**முனைவர். T.R. ஜிபின்குமார்**
துணை இயக்குனர் (அபிவிருத்தி)

ஆசிரியர்

**முனைவர். M.K. ராம்மோகன்**
இணை இயக்குனர் (மார்க்கெட்டிங்)

உதவி ஆசிரியர்


**திருமதி. K.M. திவ்யா மோகனன்**
முதுநிலை எழுத்தர்

இதழாக்க உதவி

**பிவேல்டு கார்ப்பொரேட் சொல்யூஷன்ஸ் பி லிட்.**
166, ஜவஹர் நகர், கடவந்தரா,
கொச்சி, கேரளம், இந்தியா 682 020
Phone: 0484 2206666, 2205544
www.bworld.in, life@bworld.in

வடிவமைப்பு

**ரோபி அம்பாடி**




www.mpeda.gov.in
support@mpeda.gov.in

**கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்திற்காக அச்சிட்டு வெளியிடுபவர்**

திரு. பி.ஸ்ரீகுமார், செயலாளர்,
கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்ட ஆணையம்
(வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம், இந்திய அரசு)
எம்.பி.இ.டி.எ. ஹவுஸ், பனம்பிள்ளி நகர்,
கொச்சி - 682 036, தொலைபேசி : 0484-2311979

**வெளியிடுவது**

எம்.பி.இ.டி.எ. ஹவுஸ், பனம்பிள்ளி அவென்யு,
கொச்சி - 682 036.

**அச்சகம்**

பிரிண்ட் எக்ஸ்பிரஸ்,
44/169 எ, அசோகா ரோடு,
கலூர், கொச்சி - 682 017.



**மரு. ஏ. ஜெயதிலக்**
சேர்மன்

அன்பு நண்பர்களே,

எம்.பி.இ.டி.எ. பிப்ரவரி 19,2018ல் புவனேஷ்வரில் தரக்கட்டுப்பாடு ஆய்வகம் ஒன்றைத் துவங்கியுள்ளது என்பதைத் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதி நவீனமான முறையில் உருவாக்கப்பட்ட இந்த ஆய்வகத்தில் மீன் மற்றும் மீன் சார்ந்த பொருட்களில் குளோராம்பெனிகல் மற்றும் நைட்ரோஃபியூரான் மெட்டாபாலிட்டிஸ் இருப்பதைக் கண்டறியலாம். இந்த ஆய்வகம் நேசனல் அக்ரிடிக்டேசன் போர்டு ஆஃப் டெஸ்டிங் & காலிபரேசன் லேபரட்டரீசின் (என்.ஏ.பி.எல்) அங்கீகாரமும் எக்ஸ்போர்ட் இன்ஸ்பெக்சன் கவுன்சில் ஆஃப் இந்தியாவின் (இ.ஐ.சி) ஒப்புதலும் பெற்றுள்ளது. இது போன்ற மற்ற ஆய்வகங்கள் வாங்குவதை விட குறைவான கட்டணத்தில் எம்.பி.இ.டி.எ. இந்த சேவையைச் செய்து வருகிறது.

விசாகபட்டிணத்தில் அரசு நிகழ்ச்சியாக நடைபெற்ற பார்ட்னர்சிப் சம்மிட் 2018ல் இறால் வளர்ப்பவர்களுக்கான எம்.பி.இ.டி.எ. வழங்கும் சேர்க்கை அட்டை தரும் நிகழ்ச்சியை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை மாண்புமிகு அமைச்சர் திரு.சுரேஷ் பிரபு மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு.சந்தரபாபு நாயுடு ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்த ஃபார்மர்ஸ் என்ரோல்மெண்ட் கார்டில் தனி எண் குறியீடு மற்றும் உடனடியாக கார்டில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் அடிப்படைத் தவல்களை அறிந்து கொள்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த கார்டு முறையால் மீன் பண்ணைகள் மூலமாக மீன் வளர்ப்பவர்களைக் கண்டறிந்து கொள்வது எளிதாகிறது. எம்.பி.இ.டி.எ.வின் இந்த தனித்துவமான முயற்சியால் நம் நாட்டில் நடைபெறும் மீன் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஜி.பி.எஸ். வசதியுடன் கூடிய ஏற்றுமதியாளர்களின் பூர்வீகம் கண்டறிதல், தரக்கட்டுப்பாடு, போன்றவற்றை அனைவரும் அறிந்து கொள்ளும் விதத்தில் அமைக்கப்பட்டிருப்பதால் வர்த்தகத்தின் நிறைவாக விளங்கும் பயன்பாட்டாளர்க்களின் நம்பிக்கையைப் பெறமுடியும்.

குளோப்பிஷின் அறிக்கையின்படி 2017ஆம் ஆண்டில் மீன்வளர்ப்புத் தொழிலில் மொத்தம் 83.6 மெட்ரிக்டன் கிடைத்துள்ளது என்பதாகும். அதுபோல மீன்பிடித்தலின் மூலமாக 90.4 மெட்ரிக்டன் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதில் பிடிக்கப்பட்ட மீன்களில் கணிசமான அளவு மீன்களுக்கான தீவனத்திற்காகப் பயன்படுத்தப்படுவதுடன், மனித பயன்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையின் படி இந்தியா கடல் உணவு ஏற்றுமதியில் முக்கியமான இடம் வகிக்கின்றது. இதற்கு இறால் ஏற்றுமதியின் மூலமாக அதிகரித்து வரும் வருமானமே சான்றாகும். உலகின் முன்னணி மீன் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வரிசையில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.

இந்த வருடமும் இறால் உற்பத்தி அதிகரிக்கவும் அது பெருகிவரும் தேவை மற்றும் விலை போன்றவற்றைச் சார்ந்திருக்கும் என்று மார்க்கட் அறிக்கைகள் எதிர்பார்க்கின்றன. இந்த சூழலில் மீன்களைமட்டும் ஏற்றுமதி செய்வதைவிட மதிப்பூட்டப்பட்ட மீன் பொருட்களைத் தரமான முறையில் ஏற்றுமதி செய்ய முயற்சிக்க வேண்டியது அவசியமாகும். இதனால் மீன் வளர்ப்பவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

சமீபத்தில் எம்.பி.இ.டி.எ. அதன் ஆன் லைன் போர்ட்டலில் பிஷ் எக்ஸ்சேஞ் என்ற ஒரு வசதியை மீன் விவசாயிகளுக்கு அளித்திருந்தது. இதன்படி அவர்கள் தங்களது உற்பத்தியை பதிவு செய்த ஏற்றுமதியாளர்களிடம் பதிவு செய்வதற்கு முன்பாக இந்த போர்ட்டலில் பதிவு செய்யலாம். இதன் மூலமாக உற்பத்தி செய்தவர்களின் பூர்வீகத்தைக் எளிதில் கண்டறியலாம். மேலும் இதில் பொருளாதார லாபமும், வர்த்தகத்தில் இடைத் தரகர்களின் குறுக்கீடு வருவதை விவசாயிகளும், ஏற்றுமதியாளர்களும் தவிர்க்கலாம். விவசாயிகளை எம்.பி.இ.டி.எ.வின் ஃபிஷ் எக்ஸ்சேஞ் போர்டலில் பதிவு செய்வதற்கு எம்.பி.இ.டி.எ.வின் கள அலுவலகங்கள் உதவி செய்யும். மேலும் வர்த்தகத்தைத் தொடர்வதற்கான வழி முறைகளையும் கற்றுத் தருவர். எனவே, அனைத்து விவசாயிகளும், ஏற்றுமதியாளர்களும் இந்த சுலபமான வர்த்தகத்திற்கு உதவும் ஃபிஷ் எக்ஸ்சேஞ் போர்ட்டலில் பதிவு செய்ய பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நன்றி.

# டிசம்பர் 2017ல் அமெரிக்காவிற்கான இறால் இறக்குமதி

கடந்த டிசம்பர் 2017ல் அமெரிக்கா 59,782 மெட்ரிக் டன் அளவுள்ள இறால் மீனை இறக்குமதி செய்துள்ளது. இது கடந்த வருடமான 2016ஐ விட 10.7 சதவீதம் அதிகமாகும். டிசம்பர் 2017ல் அமெரிக்கா இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த இறால் 18,980 மெட்ரிக் டன்னாகும். சென்ற வருடம் இதே கால அளவில் 14,315 மெட்ரிக் டன் இறக்குமதியாகி இருந்தது. காலண்டர் வருடம் 2017ல் அமெரிக்கா இறக்குமதி செய்த இராலின் அளவு 6,64,119 மெட்ரிக்டன்னாகும். இது 2016ஐ விட 10.04 சதவீதம் அதாவது 6,03,542 மெட்ரிக்டன் அதிகமாகும். இந்தியாவிலிருந்து ஏற்றுமதி யான மொத்த இராலின் அளவு 2,13,963 மெட்ரிக் டன்னாகும். இது 2016ல் 1,53,956 மெட்ரிக் டன்னாக இருந்தது.

## அமெரிக்கா டிசம்பர் 2017ல் இறக்குமதி செய்த இறாலின் அளவு (மெட்ரிக் டன்னில்)

| Country Name | Dec - 16 | Dec - 17 | Jan - Dec 2016 | Jan - Dec 2017 |
|---|---|---|---|---|
| ARGENTINA | 860 | 1,334 | 7,732 | 12,534 |
| AUSTRALIA | 12 | 33 | 31 | 103 |
| BANGLADESH | 516 | 105 | 4,102 | 1,294 |
| BELIZE | 65 | 0 | 212 | 102 |
| BRAZIL | 0 | 0 | 8 | 0 |
| BRUNEI | 0 | 0 | 26 | 1 |
| BURMA | 17 | 4 | 174 | 299 |
| CANADA | 84 | 96 | 3,922 | 1,802 |
| CHILE | 9 | 28 | 120 | 101 |
| CHINA | 3,894 | 4,011 | 34,783 | 46,009 |
| CHINA - HONG KONG | 1 | 6 | 55 | 69 |
| COLOMBIA | 0 | 3 | 44 | 87 |
| COSTA RICA | 4 | 2 | 71 | 75 |
| CYPRUS | 0 | 0 | 19 | 0 |
| DENMARK | 1 | 3 | 83 | 45 |
| ECUADOR | 4,965 | 5,169 | 73,128 | 71,787 |
| EL SALVADOR | 2 | 6 | 25 | 31 |
| GHANA | 0 | 0 | 0 | 9 |
| GREENLAND | 0 | 0 | 2 | 21 |
| GUATEMALA | 366 | 140 | 2,874 | 2,818 |
| GUYANA | 767 | 728 | 8,394 | 9,289 |
| HAITI | 0 | 0 | 0 | 0 |
| HONDURAS | 654 | 969 | 3,647 | 5,649 |
| ICELAND | 0 | 0 | 0 | 35 |

| | | | | |
|---|---|---|---|---|
| INDIA | 14,315 | 18,980 | 1,53,956 | 2,13,963 |
| INDONESIA | 9,212 | 10,815 | 1,17,108 | 1,18,033 |
| ITALY | 0 | 0 | 0 | 16 |
| IVORY COAST | 0 | 0 | 0 | 0 |
| JAMAICA | 0 | 0 | 0 | 0 |
| JAPAN | 1 | 1 | 2 | 3 |
| MADAGASCAR | 0 | 0 | 28 | 0 |
| MALAYSIA | 28 | 1 | 260 | 254 |
| MEXICO | 2,188 | 3,960 | 25,326 | 28,539 |
| MOROCCO | 0 | 0 | 1 | 0 |
| NETHERLANDS | 0 | 1 | 0 | 14 |
| NEW CALEDONIA | 0 | 0 | 24 | 18 |
| NEW ZEALAND | 0 | 0 | 16 | 0 |
| NICARAGUA | 383 | 388 | 2,497 | 1,837 |
| NIGERIA | 24 | 0 | 124 | 129 |
| NORWAY | 0 | 0 | 16 | 19 |
| OMAN | 0 | 0 | 0 | 3 |
| PAKISTAN | 35 | 11 | 261 | 229 |
| PANAMA | 413 | 225 | 3,066 | 2,623 |
| PERU | 727 | 815 | 9,511 | 9,950 |
| PHILIPPINES | 271 | 337 | 2,158 | 2,560 |
| PORTUGAL | 0 | 4 | 26 | 19 |
| RUSSIAN FEDERATION | 0 | 0 | 1 | 0 |
| SAUDI ARABIA | 70 | 0 | 1,030 | 0 |
| SENEGAL | 0 | 0 | 28 | 11 |
| SINGAPORE | 0 | 0 | 1 | 1 |
| SOUTH KOREA | 19 | 12 | 121 | 97 |
| SPAIN | 0 | 1 | 69 | 82 |
| SRI LANKA | 27 | 3 | 171 | 168 |
| SURINAME | 47 | 19 | 474 | 379 |
| SWEDEN | 0 | 0 | 0 | 6 |
| TAIWAN | 14 | 6 | 130 | 172 |
| THAILAND | 8,822 | 6,656 | 81,152 | 74,552 |
| UNITED ARAB EMIRATES | 14 | 75 | 233 | 383 |
| UNITED KINGDOM | 0 | 0 | 0 | 0 |
| VENEZUELA | 266 | 169 | 2,903 | 2,076 |
| VIETNAM | 4,929 | 4,666 | 63,397 | 55,823 |
| TOTAL | 54,022 | 59,782 | 6,03,542 | 6,64,119 |

Source : NOAA Fisheries, Office of Science & Technology

# கொச்சியில் அமோகமான சஃபாரி 2 எக்ஸ்போ



*முனைவர். திரிலோசன் மோகோப்ரா டி.ஜி. ஐ.சி.ஏ.ஆர்., முனைவர். ஜே.கே.ஜெனா, டி.டி.ஜி. (ஃபிஷ்ஷரிஸ்) மற்றும் முனைவர்.எ. கோபாலகிருஷ்ணன், இயக்குனர், சி.எம்.எஃப்.ஆர்.ஐ. ஆகியோர் சஃபாரி 2 எக்ஸ்போவை பார்வையிடும் காட்சி*

கொச்சியில் ஜனவரி 15-17, 2018ல் சி.எம்.எஃப்.ஆர்.ஐ. ஏற்பாடு செய்திருந்த Societal Application in Fisheries and Aquaculture using Remote Sensing Imagery (SAFARI), எனும் இரண்டாவது சர்வதேசக் கருத்தரங்கில் நெட்பிஷ் மற்றும் எம்.பி.இ.டி.ஏ., கொச்சி கலந்து கொண்டன. இந்த கண்காட்சிக் கூடத்தில் கடல் மீன் பிடிப்பு தொடர்பான தகவல் விளக்க அறிவிப்பு பதாகைகளும், கடல் மீன் பிடிப்புபற்றிய விளக்கக் கையேடுகளும் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த கண்காட்சி மிகுந்த அளவிலான பொதுமக்களைக் கவர்ந்தது எனலாம்.



# ஆல்பர்டியன் இண்டர்நேஷனல் எஜுகேசன் எக்ஸ்போ 2018



*ஆல்பர்டியன் இண்டர்னேசனல் எஜுகேசன் எக்ஸ்போ 2018 கண்காட்சியில் நெட்பிஷ் - எம்.பி.இ.டி.வின். காட்சிக் கூடம்*

நெட்பிஷ் மற்றும் எம்.பி.இ.டி.எ.வின் கொச்சின் மண்டல அலுவலகம் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்த ஆல்பர்டியன் இண்டர்னேசனல் எஜுகேசன் எக்ஸ்போ 2018 என்ற கண்காட்சி எர்ணாகுளம், செயிண்ட்.ஆல் பர்ட்ஸ் கல்லூரியில் ஜனவரி 4-6, 2018 தேதிகளில் நடைபெற்றது.

இந்த கண்காட்சி நெட்பிஷ் மற்றும் எம்.பி.இ.டி.எ.விற்கு கடலுணவு ஏற்றுமதித் துறையில் தங்களின் ஏற்றுமதி அபிவிருத்தி செயல்பாடுகளை விளக்கிக்கூறும்களமாக அமைந்தது. நெட்பிஷ்தொடர்பானவிளக்கம்தரும் அறிவிப்பு பதாகைகள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. மேலும் மீன்களை கையாளும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் மீன் வளத்தைப் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய செயல்கள் யாவும் விளக்கப்பட்டன. மேலும் மீன் பிடித்தல் மற்றும் மீன் வளர்த்தல் தொடர்பான நுட்பங்கள் மற்றும் மீன் தரும் ஊட்டச் சத்துக்கள், மற்றும் மீன்களைக் கையாளும் விதம், மீன் வளத்தைப் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கூறப்பட்டது.

இக்கல்லூரி மற்றும் அருகிலுள்ள கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஆர்வத்துடன் இந்த கண்காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டு தகவல்களை சேகரித்துக் கொண்டனர்.

# நெட்பிஷ் கலந்து கொண்ட
# காரவாலி உத்சவ் 2017



*விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள மதிப்பூட்டப்பட்ட மீன் சார்ந்த பொருட்கள்*

கர்நாடகத்தில் கார்வார் மாவட்டத்தில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்றுவரும் திருவிழா தான் காரவாலி உத்சவ். இது மாவட்ட நிர்வாகத்தால் ஒவ்வொரு வருடமும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்தத் திருவிழா டிசம்பர் 2017, 8-10 தேதி களில் கார்வாரில் ரவீந்தரநாத் தாகூர் பீச்சில் நடத்தப்பட்டது.

நெட்பிஷ் இந்த கண்காட்சியில் நெட்பிஷ் பயிற்சியளித்த பெண்கள் சுய உதவிக் குழுவான சுவாசஹாய சங்கத்தின் தீவிரமான பங்கேற்பில் கலந்து கொண்டது. இந்த குழு சார்ந்தவர்கள் சிறுதொழில் என்ற பெயரில் மீன் பயன்படுத்திய மதிப்பூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர். இதில் கருவாடு எனப்படும் உலர்த்திய மீன்களும் உண்டு. மேலும் SCODWES சார்ந்த கள அதிகாரிகளின் மேற்பார்வையில் மீன் சார்ந்த மதிப்பூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து, உணவிற்கேற்ற பிளாஸ்டிக் கவர்களில் விற்பனை செய்கின்றனர்.

நெட்பிஷ் காட்சிக் கூடத்தில் இறால் சட்னி பவுடர், குரோக்கர் சட்னி பவுடர், நெத்திலி சட்னி பவுடர், கானாங்கெளுத்தி சட்னி பவுடர், மற்றும் டிரைட் சார்க் மோல்ஸ், போன்றவை விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. பொதுமக்கள் பெரிதும் விரும்பி இந்த காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டனர். இதனால் இந்த மூன்று நாள் நிகழ்ச்சியின் போது கணிசமான அளவிலான வருமானம் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான பொதுமக்கள் இது போன்ற விற்பனையை இந்த கண்காட்சி சமயத்தில் மட்டுமில் லாது எல்லா நாட்களிலும் தொடரவேண்டும் என்பதாகும்.

நெட்பிஷ் மற்றும் SCODWES ஆகியவை இந்த மாநிலத்தில் செய்து வரும் செயல்பாடுகளை விளக்கும் விதத்தி லான தகவல்கள் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் மீன் வளர்ப்பதில் கடைப்பிடிக்கப்படும் தரக் கட்டுப்பாடு, மற்றும் மீன்



*காராவலி உற்சவத்தில் நெட்பிஷ் காட்சிக் கூடத்தைப் பார்வையிடும் பொதுமக்கள்*

வளத்தைப் பாதுகாப்பது தொடர்பான தகவல்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டன.

இந்தி மற்றும் கன்னட மொழியில் அனிமேஷன் காட்சிகள் பொதுமக்களுக்கு இந்த காட்சிக் கூடத்தில் காட்டப்பட்டன. இது பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது. இதில் கலந்து கொண்ட பெண்கள் சுய உதவிக் குழிவினர் தங்களுக்கு வாய்ப்பளித்த மைக்கு நன்றி கூறினர். மேலும் பொதுமக்கள் இது போன்ற மீன் பொருட்களின் மதிப்பூட்டம் பெற்ற பொருட்களின் மீது காட்டிய ஆர்வம், தங்களுக்கு மேலும் புதிய பொருட்களை உருவாக்கும் உத்வேகத்தைத் தந்துள்ளது என்ற கருத்தைத் தெரிவித்தனர்.

# ஜனவரி 2018ல் இந்தியாவில் குறிப்பிட்ட துறைமுகங்களில் மீன் வரத்தின் சிறப்பம்சங்கள்

ஹனுமந்த ராவ், வி.வி.அஃப்சல், என்.ஜே.நீத்து, & ஜோய்சி வி தாமஸ்
நெட்ஃபிஷ் – எம்.பி.இ.டி.எ


இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதிகளிலுள்ள முக்கியமான மீன்பிடித் துறைமுகங்களில் வந்த மீன்பிடிப் படகுகளின் வரத்துக்களை, நெட்ஃபிஷ், எம்.பி.இ.டி.எ.வின் கேட்ச் சர்ட்டிபிகேசன் சிஸ்டத்திற்காக பதிவு செய்தது. நெட்ஃபிஷ் இந்தியா, ஒன்பது கடல் சார்ந்த மாநிலங்களில் அமைந்திருக்கும் சுமார் 46 முக்கிய துறைமுகங்களில் வந்து சேரும் மீன்களின் கணக்கைக் கவனித்து வருகிறது. (அட்டவணை1). இவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்களை ஆய்வுசெய்து மீன்களை இன வாரியாகவும், மாநிலவாரியாகவும், துறைமுக வாரியாகவும் பிரித்து வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கை ஜனவரி 2018ல் இந்தியாவின் முக்கியமான துறைமுகங்களில் வந்து சேர்ந்த மீன்களின் புள்ளிவிவரங்களைக் கூறுகிறது.

அட்டவணை 1: புள்ளிவிவரத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட துறைமுகங்கள் மற்றும் கரையிறங்கும் மையங்கள்


| Sl. No. | State | Fishing Harbour |
|---|---|---|
| 1 | Kerala | Beypore |
| 2 | | Puthiyappa |
| 3 | | Thoppumpady |
| 4 | | Munambam |
| 5 | | Sakthikulangara |
| 6 | | Thottapally |
| 7 | | Kayamkulam |
| 8 | | Vizhinjam |
| 9 | Karnataka | Mangalore |
| 10 | | Malpe |
| 11 | | Gangoli |
| 12 | | Tadri |
| 13 | | Karwar |
| 14 | Maharashtra | Harne |
| 15 | | New Ferry Wharf |
| 16 | | Ratnagiri (Mirkarwada) |
| 17 | | Sasson Dock |
| 18 | Gujarat | Veraval |
| 19 | | Porbandar |
| 20 | | Mangrol |
| 21 | West Bengal | Digha (Sankarpur) |
| 22 | | Deshapran |
| 23 | | Namkhana |
| 24 | | Sultanpur |
| 25 | | Kakdwip |
| 26 | | Raidigi |
| 27 | Odisha | Paradeep |
| 28 | | Balaramgadi |
| 29 | | Bahabalapur |
| 30 | | Dhamara |
| 31 | Andhra Pradesh | Kakinada |
| 32 | | Machilipatnam |
| 33 | | Nizampatnam |
| 34 | | Visakhapatnam |
| 35 | Tamil Nadu | Chennai |
| 36 | | Pazhiyar |
| 37 | | Nagapattinam |
| 38 | | Tuticorin |
| 39 | | Cuddalore |
| 40 | | Mandapam |
| 41 | | Colachel |
| 42 | | Pondicherry |
| 43 | | Karaikal |
| 44 | | Chinnamottom |
| 45 | Goa | Cutbona |
| 46 | | Malim |

### கிடைத்த மீன்களின் அடிப்படையில் மதிப்பீடு

ஜனவரி 2018ல் தேர்வு செய்யப்பட்ட 46 துறைமுகங்கள் மற்றும் கரையிறங்கும் மையங்களில் சுமார் 86,568.64 டன் மீன் கிடைத்ததாக பதிவாகியுள்ளது. இதில் 37,443.01 டன் (43 சதவீதம்) ஆழ்கடல் மீன்பிடித்தலின் மூலமாகக் கிடைத்ததாகும். இதில் 27,540.88 டன் (32 சதவீதம்) கடலடிவாழ் மீன்களாகும், 13,732.36 டன் (16 சதவீதம்) மொலஸ்கன் வகையும் மீதியுள்ள 7,852.39 டன் (9 சதம்) கிரஸ்டாசியன் வகையைச் சேர்ந்தவையாகும்.




*வரைபடம் 1: ஜனவரி 2018ல் இனவாரியான மீன் வரத்து*




*வரைபடம் 2: ஜனவரி 2018ல் கிடைத்த முக்கியமான மீன்கள்*

சுமார் 109 வகையான மீன்கள் இந்த மாதம் கிடைத்தன. அவற்றை வரிசைப்படுத்திய போது முதல் ஐந்து இடத்தில் இருப்பவை, வாலை, அயிலை, சாலை, ஊசிக்கணவாய், மற்றும் சங்கரா, என்பனவாகும். இந்த ஐந்தும் சேர்ந்து மொத்த அளவில் 40 சதவீதமாகும். (வரை படம்:2) இவற்றுள் வாலை மீன் மட்டுமே அனைத்து இடங்களிலும் அதிகபட்சமாக 7,526.59 டன் அளவில் இருந்தது. இது மொத்த அளவில் 9 சதவீதமாகும். இந்த ஐந்து வகைகளைத் தவிர அடுத்த நிலையில் இருந்தவை, கணவாய், மற்றும் கக்காசி ஆகும். இவற்றின் பங்கு முறையே 5,062.95 டன், & 4,995.13 டன்களாகும். இம்மாதம் மிகக் குறைந்த அளவில் கிடைத்தது வெலமீனாகும்.(0.30 டன்)

ஜனவரி 2018ல் இனம் மற்றும் அளவுப்படி வரிசைப்படுத்திய விவரத்தை அட்டவணை 2ல் காணலாம். ஆழ்கடல் மீன் வரிசையில் வாலை மீன் முதல் இடத்தையும், இதனைத் தொடர்ந்து அயிலையும், சாலையும் இருக்கக் காணலாம். கடலடி மீன் வகையில், புல்ஸ் ஐ, குரோக்கர்ஸ் மற்றும் சங்கரா வகை மீன்களாகும். ஷெல் ஃபிஷ் வகையில் கிடைத்தவையில் மொலுஸ்கேன் இனத்தைச் சேர்ந்த கணவாய், ஊசிக்கணவாய், ஆக்டோபஸ், ஆகியவை 64 சதவீதமும், மீதமுள்ள 36 சதவீதம் கிரஸ்டாசியன் வகையில் பினாயிட் இரால் அதிக அளவில் இருந்தாலும், கரிகாடி இரால் அதிக அளவில் இருந்தது.(2,070.92 டன்)

அட்டவணை 2: ஜனவரி 2018ல் இனவாரியான மீன்களின் பட்டியல்


| Fish Item | Qty. in tons | % of total catch |
|---|---|---|
| **Pelagic Finfish** | | |
| Ribbonfish | 7526.59 | 8.69 |
| Indian mackerel | 7302.18 | 8.44 |
| Indian oil sardine | 5865.53 | 6.78 |
| Tuna | 4209.77 | 4.86 |
| Seer fish | 2346.04 | 2.71 |
| Anchovies | 2164.94 | 2.50 |
| Scads | 1318.90 | 1.52 |
| Horse mackerel | 1254.94 | 1.45 |
| Dolphin fish | 1154.39 | 1.33 |
| Barracuda | 896.06 | 1.04 |
| Trevallys | 620.34 | 0.72 |
| Lesser Sardines | 606.88 | 0.70 |
| Bombay duck | 558.64 | 0.65 |
| Herring | 245.72 | 0.28 |
| Queen fishes | 207.51 | 0.24 |
| Leather jacket | 190.31 | 0.22 |
| Mullet | 140.88 | 0.16 |
| Indian thread fish | 138.80 | 0.16 |
| Indian ilisha | 104.55 | 0.12 |
| Cobia | 97.10 | 0.11 |
| Marlins | 85.43 | 0.10 |
| Needle fish | 83.30 | 0.10 |
| Oriental bonito | 69.40 | 0.08 |
| Hilsa | 66.94 | 0.08 |
| Flat needle fish | 55.96 | 0.06 |
| Indian salmon | 46.09 | 0.05 |
| Sail fish | 39.60 | 0.05 |
| Sea bass | 29.00 | 0.03 |
| Silver sillago | 9.65 | 0.01 |
| Rainbow runner | 7.09 | 0.01 |
| Milk fish | 0.50 | 0.00 |
| **Toal Pelagic** | **37443.01** | **43.25** |
| **Demersal finfish** | | |
| Bull's eye | 6908.33 | 7.98 |
| Japanese threadfin bream | 6379.54 | 7.37 |
| Croakers | 3460.80 | 4.00 |
| Sole fish | 2665.51 | 3.08 |
| Lizard fish | 2122.48 | 2.45 |

| | | |
|---|---|---|
| Cat fish | 1690.78 | 1.95 |
| Reef cod | 1559.38 | 1.80 |
| Snapper | 1073.13 | 1.24 |
| Pomfret | 682.98 | 0.79 |
| Moon fish | 270.30 | 0.31 |
| Pony fish | 218.28 | 0.25 |
| Eel | 150.98 | 0.17 |
| Goat fish | 146.02 | 0.17 |
| Rays | 100.87 | 0.12 |
| Tiger perch | 22.24 | 0.03 |
| Emperor bream | 20.72 | 0.02 |
| Glassy perchlet | 15.73 | 0.02 |
| Indian halibut | 14.54 | 0.02 |
| Ghol | 14.41 | 0.02 |
| Parrot fish | 7.00 | 0.01 |
| Whip fin silver biddy | 6.85 | 0.01 |
| Batfish | 3.41 | 0.00 |
| Black tip shark | 3.10 | 0.00 |
| Filefish | 2.00 | 0.00 |
| Yellow fin sea bream | 1.55 | 0.00 |
| **Toal** | **27540.88** | **31.81** |
| **Shelfish** | | |
| ***Crustacean*** | | |
| Penaeid shrimps | 7183.60 | 8.30 |
| Sea crab | 625.84 | 0.72 |
| Mud crab | 21.23 | 0.02 |
| Lobsters | 17.22 | 0.02 |
| Non penaeid shrimp | 4.50 | 0.01 |
| **Toal Crustacean** | **7852.39** | **90.07** |
| ***Mollusc*** | | |
| Squid | 7181.57 | 8.30 |
| Cuttlefish | 5062.95 | 5.85 |
| Octopus | 1487.84 | 1.72 |
| ***Total Mollusc*** | ***13732.36*** | ***15.86*** |
| **Total Shellfish** | **21584.75** | **24.93** |
| **Grand Total** | **86568.64** | **100.00** |

## மாநிலவாரியான அளவு

மாநிலவாரியான மீன்களின் வரத்தைக் கணக்கிட்டால் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் ( கேரளா, கர்நாடகம், மற்றும் கோவாவில் தேர்வு செய்யப்பட்ட 15 துறைமுகங்களிலிருந்து) அதிக அளவாக 37,099.25 டன் கிடைத்துள்ளது.(43 சதவீதம்) இதனைத் தொடர்வது வடமேற்குப் பகுதியாகும். (மகாரஷ்ட்ரா, மற்றும் குஜராத் கடற்கரைப் பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட ஏழு மையங்கள்) 37,020.39 டன். (43 சதவீதம்) (வரைபடம் 3) தென் கிழக்குப் பகுதியான தமிழகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் 13 துறைமுகங்களில் மொத்தத்தில் 5,140.83 டன் கிடைத்துள்ளது. இது மொத்த அளவில் ஆறு சதமாகும். வடகிழக்குப் பகுதியில் ஒடிசா, மேற்கு வங்கம் ஆகிய இடங்களிலுள்ள 10 மையங்களில் சுமார் 7,308.17 டன் மீன் கிடைத்தது. இது மொத்த அளவில் எட்டு சதவீதமாகும்.

வடமேற்கு, தென்மேற்கு மற்றும் வடகிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் ஆழ்கடல் மீன்கள் இதர இரண்டு இனங்களைவிட அதிகமாக இருந்தது. அதேபோல, தென்கிழக்குப் பகுதியில் கடலடிவாழ் மீன்கள் அதிகமாக இருந்தது. (வரைபடம்-4) தென்கிழக்குப் பகுதிகளில் ஷெல்பிஷ் வகை அதிகம் இருந்தது. தென்கிழக்குப் பகுதியைத்தவிர மற்ற இடங்களில் ஷெல்பிஷ் வகை மீன்களின் வரத்து குறைவாக இருந்தது.




*வரைபடம் 3. ஜனவரி 2018ல் மாநிலம்வாரியாக கிடைத்த மீன்களின் அளவு*




*வரைபடம் 4 ஒவ்வொரு மாநிலத்திலும் இனவாரியாகக் கிடைத்த மீன்களின் ஒப்பீடு*

அட்டவணை 3ல் ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைத்த ஐந்து ரக மீன்களின் அளவு தரப்பட்டுள்ளது.


அட்டவணை3: ஜனவரி 2018-ல் ஒவ்வொரு மாநிலத்திலும் கிடைத்த முக்கியமான மீன்கள்

| Item | Quantity in tons | % of total landings of the region |
|---|---|---|
| **South West** | | |
| Indian mackerel | 5141.47 | 13.86 |
| Indian oil sardine | 5133.74 | 13.84 |
| Japanese Threadfin bream | 3502.97 | 9.44 |
| Squid | 3176.81 | 8.56 |
| Cuttlefish | 1611.78 | 4.34 |
| **North West** | | |
| Ribbonfish | 5342.27 | 14.43 |
| Bull's eye - dusky finned | 4403.10 | 11.89 |
| Squid | 3509.19 | 9.48 |
| Cuttlefish | 2716.96 | 7.34 |
| Japanese Threadfin bream | 2647.30 | 7.15 |
| **South East** | | |
| Tuna | 534.66 | 10.40 |
| Cuttlefish | 495.43 | 9.64 |
| Ribbonfish | 375.83 | 7.31 |
| White prawn | 282.95 | 5.50 |
| Squid | 279.37 | 5.43 |
| **North East** | | |
| Croaker | 1004.58 | 13.75 |
| Golden anchovy | 597.73 | 8.18 |
| Indian oil sardine | 563.48 | 7.71 |
| Ribbo fish | 519.72 | 7.11 |
| Karikaadi shrimp | 378.27 | 5.18 |

## மாநிலவாரியான வரத்து

இந்தியாவின் முக்கியமான ஒன்பது கடற்கரை சார்ந்த மாநிலங்களில் குஜராத்தில் இம்மாதம் அதிகப்படியான அளவான 25,846.79 டன் மீன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 30 சதமாகும். (வரைபடம் 5) குஜராத்திற்கு அடுத்ததாக கேரளாவில் 18,124.18 டன் வந்துள்ளது. இது மொத்த அளவில் 21 சதவீத மாகும்.

கர்நாடகம் 15,386.36 டன்களுடன் மூன்றாவது இடத்தி லுள்ளது (18 சதவீதம்). மேற்குக் கடற்கரை மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து மொத்த அளவில் 85 சதவீத மீன் வரத்தைப் பெற்றுள்ளன. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் மேற்கு வங்கத்தில் அதிக அளவான 4,755.69 டன் ( 5 சதவீதம்) பதிவாகியுள்ளது. மிகக் குறைவான மீன் வரத்து பதிவாகியுள்ள மாநிலம் ஆந்திரப்பிரதேசம். இங்கு 2,134.53 டன் மட்டுமே கிடைத்துள்ளது.




*வரைபடம் 5: ஜனவரி 2018ல் மாநிலவாரியாகக் கிடைத்த அளவுகள் (டன்களில்)*

அட்டவணை 4: ஜனவரி 2018ல் கிடைத்த முக்கியமான இனங்களின் பட்டியல்


| Item | Quantity in tons | % of total landings of the state |
|---|---|---|
| **Kerala** | | |
| Japanese Threadfin bream | 2112.62 | 11.66 |
| Indian oil sardine | 2001.97 | 11.05 |
| Squid | 1408.10 | 7.77 |
| Cuttlefish | 1163.66 | 6.42 |
| Indian mackerel | 1018.97 | 5.62 |
| **Karnataka** | | |
| Indian mackerel | 3002.45 | 19.51 |
| Indian oil sardine | 2548.67 | 16.55 |
| Squid | 1482.01 | 9.63 |
| Japanese Threadfin bream | 13.69.96 | 8.90 |
| Bull's eye - dusky finned | 590.63 | 3.84 |
| Indian mackerel | 1120.05 | 31.21 |
| Indian oil sardine | 583.10 | 16.25 |
| Little tunny | 408.40 | 11.38 |
| Tuna | 361.29 | 10.07 |
| Squid | 286.70 | 7.99 |
| **Maharashtra** | | |
| Indian mackerel | 984.73 | 8.81 |
| Horse mackerel | 965.87 | 8.64 |
| Squid | 960.39 | 8.60 |
| Croaker | 904.59 | 8.10 |
| Ribbon fish | 894.27 | 8.00 |
| **Gujarat** | | |
| Ribbonfish | 4448.00 | 17.21 |
| Bull's eye - dusky finned | 4403.10 | 17.04 |
| Squid | 2548.80 | 9.86 |
| Cuttlefish | 2293.90 | 8.87 |
| Japanese Threadfin bream | 2149.50 | 8.32 |
| **Tamil Nadu** | | |
| Cuttlefish | 467.71 | 15.56 |
| Squid | 252.70 | 8.41 |
| Tuna | 205.17 | 6.82 |
| Indian oil sardine | 141.49 | 4.71 |
| Indian mackerel | 120.06 | 3.99 |
| **Andhra Pradesh** | | |
| Tuna | 329.49 | 15.44 |
| Ribbonfish | 286.41 | 13.42 |
| White prawn | 212.19 | 9.94 |
| Brown shrimp | 198.87 | 9.32 |
| Pink shrimp | 186.97 | 8.76 |
| **Odisha** | | |
| Croaker | 514.83 | 20.17 |
| Golden anchovy | 253.42 | 9.93 |
| Ribbon fish | 243.95 | 9.56 |
| Sole fish | 184.08 | 7.21 |
| Japanese Threadfin bream | 170.62 | 6.68 |
| **West Bengal** | | |
| Croaker | 489.748 | 10.30 |
| Indian oil sardine | 479.192 | 10.08 |
| Golden anchovy | 344.311 | 7.24 |
| Bombay duck | 327.804 | 6.89 |
| Indian mackerel | 296.240 | 6.23 |




***வரைபடம் 6: ஜனவரி 2018ல் மேற்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)***

## துறைமுகவாரியான மீன் வரத்து

இம்மாதத்தில் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் தேர்வு செய்த துறைமுகங்கள் வாரியாகக் கிடைத்த மீன்களின் அளவு பற்றிய வரைபடம் 6, 7 ஆகும். மொத்தமுள்ள 46 துறைமுகங்களில் கேரளத்திலுள்ள பெய்பூர் துறைமுகத்தில் அதிக அளவான 10,888.50 டன் (13 சதவீதம்) மீன் வரத்து பதிவாகியுள்ளது. இதனைத் தொடர்வது குஜராத்திலுள்ள வேராவல் துறைமுகமாகும். இங்கு 10,539.70 டன் (12 சதவீதம்) பதிவாகியுள்ளது.




***வரைபடம் 7: ஜனவரி 2018ல் கிழக்குக் கடற்கரை துறைமுகங்களில் கிடைத்த அளவுகள் (டன்களில்)***

குஜராத்தில் போர்பந்தர் துறைமுகத்தில் 9,135.09 டன்னும்,(11 சதம்) கர்நாடகத்திலுள்ள மங்களூர் துறைமுகத்தில் 7,048.87 டன்னும் (எட்டு சதம்) பதிவாகி உள்ளது. கிழக்குக் கடற்கரையில், மேற்கு வங்கத்திலுள்ள தேசாப்ரான் துறைமுகத்தில் 1,822.31 டன் (2 சதம்) அதிகமாகக் கிடைத்துள்ளது. மேற்குக் கடற்கரையில் தேர்வு செய்த 23 துறைமுகங்களில் 15 இடங்களில் 1000 டன்னிற்கும் அதிகமாக கிடைத்ததாகப் பதிவாகியுள்ளது. அதே சமயம் கிழக்குக் கடற்கரையில் மூன்று இடங்களில் 1000 டன்னிற்கும் அதிகமாகக் கிடைத்துள்ளது. மிகவும் குறைவான அளவான 46.58 டன் பதி வாகியுள்ள இடம் கேரளத்திலுள்ள விழிஞ்சம் துறைமுகமாகும். (31.14 டன்)

### படகுகளின் வரவின் அடிப்படையிலான மதிப்பீடு

ஜனவரி 2018ல் வந்த மொத்த படகுகளின் எண்ணிக்கை 33,568 ஆகும். இதில் அதிகபட்சமாக 4,677 படகுகள் வந்துள்ளது விராவல் துறைமுகத்திலாகும். இதனைத் தொடவது போர்பந்தர் துறைமுகத்தில் 3,106 படகுகள் வந்துள்ளன. மொத்தமுள்ள 46 துறைமுகங்களில் ஏழு இடங்களில் 1000ற்கும் அதிகமான படகுகள் வந்துள்ளன. இது குறித்த விவரம் அட்டவணை 5ல் உள்ளது. மீன்பிடிப்படகுகளில் 78 சதவீதம் மீன்பிடிக் கப்பல் வகையைச் சேர்ந்தவை. மற்றவை ப்ர்ஸ் சீனிங், ரிங் சீனிங், கில்னெட்டர்ஸ் மற்றும் பாரம்பரிய கட்டுமர வகையைச் சேர்ந்தவைகளாகும்.

அட்டவணை 5: ஜனவரி 2018ல் 1000 படகுகளுக்கும் அதிகமாக வந்த துறைமுகங்கள்

| Sl. No. | Fishing harbours | State | Number of boat landings |
|---|---|---|---|
| 1 | Veraval | Gujarat | 4677 |
| 2 | Porbandar | Gujarat | 3106 |
| 3 | Mangrol | Gujarat | 2658 |
| 4 | Mangrol | Gujarat | 2658 |
| 5 | Malpe | Karnataka | 2092 |
| 6 | Harne | Maharashtra | 1362 |
| 7 | Ratnagiri (Mirkarwada) | Maharashtra | 1042 |

### ஒப்பீட்டு பகுத்தாய்வு

அட்டவணை 6ல் ஜனவரி மாதத்தை, முந்தைய மாதங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். ஜனவரி மாதத்தில் டிசம்பர் மாதத்தைவிட 3,700 டன் அதிகமாகக் கிடைத்துள்ளது. ஆழ்கடல் மீன் பிடித்தல் சென்ற மாதத்தைவிட சதவீத அளவில் அதிகரித்துள்ளது.

அட்டவணை 6: ஒப்பீட்டு பகுத்தாய்வு

| | November 2017 | December 2017 | January 2018 |
|---|---|---|---|
| **Total Catch** | **1,04,988.48 t** | **82,849.37 t** | **86,568.64 t** |
| Landing of Pelagic finfishes | 54,485.10 t (52%) | 39,510.15 t (48%) | 37,443.01 t (43%) |
| Landing of Demersal finfishes | 25,499.46 t (24%) | 23,492.34 t (28%) | 27,540.88 t (32%) |
| Landing of Shellfishes | 25,003.91 t (24%) | 19,846.87 t (24%) | 21,584.75 t (25%) |
| Species recorded highest landing | Indian oil sardine (15%) | Indian oil sardine (10%) | Ribbon fish (9%) |
| State recorded highest landing | Gujarat (26%) | Gujarat (30%) | Gujarat (30%) |
| Harbour recorded highest landing | Veraval (13%) | Veraval (13%) | Beypore )13%) |
| **Total Boat Arrivals** | **36,858** | **32,115** | **32,115** |

** Percentage of Total Catch*

கடலடிவாழ் மீன்களின் வரத்து அதிகமாக இருந்தாலும் பங்களிப்பில் ஐந்து சதம் குறைந்துள்ளது.ஆழ்கடல்வாழ் மீன்களின் வளம் நான்கு சதம் அதிகரித்துள்ளது. அதேபோல லெல்ஃபிஷ் வரத்து ஒரு சதவீதம் அதிகரித்துள்ளது. வாளை மீன் எப்போதும் போல் முதலிடத்தில் உள்ளது. அயிலை மீன் வரத்து இம்மாதம் ஐந்தாவது இடத்திற்கு சென்றுவிட்டது. குஜராத் அதிகமான மீன் வரத்தில் முதலிடத்தையும், துறைமுக வகையில் கேரளத்திலுள்ள பெய்ப்பூரில் அதிகமான அளவு கிடைத்துள்ளது. டிசம்பர் மாதத்தைவிட ஜனவரி 2018ல் 1400 படகுகள் அதிகமாக வந்துள்ளது.

**சுருக்கம்**

ஜனவரி 2018ல் 46 முக்கியமான துறைமுகங்களில் சுமார் 86,568.64 டன் மீன் பிடித்தல் நடந்துள்ளது. இதில் ஆழ்கடல் மீன்பிடிப்பு, லெல்ஃபிஷ் மற்றும் கடலடிவாழ் மீன்பிடிப்பைவிட அதிக அளவில் இருந்துள்ளது. மொத்த அளவில் வாளை மீனின் வரத்து அதிகமாக இருந்துள்ளது. மேற்குக் கடற்கரை மாநிலங்கள் மொத்தத்தில் 85 சதவீதமும், தென்மேற்குக் கடற்கரைப் பகுதிகள் 43 சதவீதமும் பங்களித்துள்ளன. ஒன்பது கடற்கரை சார்ந்த மாநிலங்களில் குஜராத்தில் அதிகமான மீன் பிடிப்பு நடைபெற்றுள்ளது. மொத்தமுள்ள 47 துறைமுகங்களில் 18 இடங்களில் 1000 டன்களுக்கும் அதிகமான மீன் பிடித்தல் இருந்துள்ளது. விராவல் துறைமுகத்தில் படகுகளின் வரத்தும் அதிகமாக இருந்தது.

# நீளக்கால்நண்டின் நிலைப்பாட்டிற்கான திட்டம் (Blue swimming crab)

முனைவர்.ஜி.சஞ்சீவிராஜ்
ஒருங்கமைப்பாளர், பி.எஸ்.சி. எஃப்.ஐ.பி. திட்டம், கிராப் புராசசர்ஸ் அசோசியேசன், இந்தியா.



*தூத்துக்குடி மாவட்டம் வெள்ளப்பட்டி கிராமத்தில் கரைசேர்ந்த நீளக்கால் நண்டுகள்*

உலகம் முழுவதிலும் புரோட்டின் சத்து நிறைந்த உணவுகளின் தேவை, முக்கியமாக மிருகங்களின் புரோட்டின் அதிகமாகத் தேவைப்படுகிறது. மீன் மற்றும் மீன் சார்ந்த பொருட்கள், கடல் மற்றும் நன்னீர் வளர்ப்பில் கிடைத்த கணுக்காலி, துடுப்புடைய மீன்கள் மற்றும் நண்டு போன்றவற்றின் தேவை நாளிற்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கணுக்காலி வகைகளில் கடலிலிருந்து கிடக்கும் இறால் உள்நாட்டிடிலும், உலகச் சந்தையிலும் அதிகமான தனது பங்களிப்பைத் தருகிறது. கடல் சூழல் மற்றும் மீன்வளர்ப்புப் பண்ணைகளிலிருந்து கிடைக்கும் இறாலும் உள் மற்றும் வெளிநாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. கணுக்காலி ரகங்களில் அடுத்த இடத்தில் இருப்பவை நண்டுகளாகும். ஏற்றுமதியாகும் நண்டுகள் கடல் மற்றும் உப்பு நீர் சூழலில் வளர்பவையாகும். ஏற்றுமதிக்கேற்ற அல்லது உப்பு நீர்வாழும் நண்டுகள் பெரிய நண்டுகளாகும். பெரிய நண்டை, அறிவியலில் Scylla tranquabaricus என்றும் சிறிய நண்டை Scylla serrata



*முட்டையுடன் கூடிய நண்டுகள்*

என்றும் அழைப்பர். கடல் வாழ் நண்டுகளில் பல ரகங்கள் உள்ளன. ஆனால் ஒரு சில நண்டு வகைகள் மட்டுமே உண்பதற்கு ஏற்றவையாகும். இவற்றுள் பெரிய நண்டு வகைகளில் Blue Swimming Crab (BSC) எனும் நீளக்கால் நண்டு



*சி.எம்.பி.எ. களப்பணியாளர்கள் குறிப்புகள் சேகரிக்கின்றனர்*

மட்டுமே உள்நாடு மற்றும் வெளிநாட்டுத் தேவைக்கு ஏற்றதாகும். இந்த ரக நண்டுகள் இந்திய மீன்பிடிப்புத் துறைமுகங்களில் அதிக அளவில் கிடைக்கிறது. பொதுவாக பாரம்பரியமான படகுகளில் பிடிக்கப்பட்டு வந்தாலும் தற்போது நவீனமான FRP - (Fiberglass Reinforced Plastic crafts எனப்படும் மீன்பிடிக்கப்பல்கள் மற்றும் Trawlers எனப்படும் பெரும் பைவலை இழுப்புப் படகுகள் மூலமாக பிடிக்கப்படுகின்றன.

### நீளக்கால் நண்டு (Blue Swimming Crab - Portunus pelagicus)

இந்த ரக நண்டுகள் நீந்திச் செல்லாத, கடற்கரைக்கு அருகில், இயற்கையில் தாராளமாகக் கிடைக்கும் உணவுப் பொருட்கள் கிடைக்கும் இடத்தில் வாழ்பவையாகும். முதிர்ந்து விற்பனைக்காகத் தேர்வு செய்யப்படும் நண்டு 18-22 செ.மீ அளவில் இருக்கும். இது இனப்பெருக்க வளம் மிகுந்ததாகும். இந்த நண்டுகள் தெளிவான கடல் நீர் உள்ள பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்லும் தன்மையுடையது. ஆரம்பத்தில் மஞ்சள் நிறத்தில் இருக்கும் இதன் முட்டைகள் வளர்ச்சியடையும் போது ஆரஞ்ச் அல்லது பிரவுன் நிறத்தில் இருக்கும். ஆண் – பெண் நண்டுகளின் சேர்க்கையால் இனப்பெருக்கம் நடைபெறுகிறது. ஆண் – பெண் நண்டுகள் இணையும் போது, ஆண் நண்டுகளின் விந்தணுக்கள் பெண் நண்டுகளின் வயிற்றுப்பகுதிகளில் அமைந்திருக்கும் கருப்பைகளைச் சென்றடைகிறது. பெண் நண்டுகள் முட்டைகளை இடும்போது அவை பிரவுன் நிறத்தில் இருக்கும். வளர்ச்சியடைந்த முட்டைகள் கருமை நிறத்திலும் மற்றும் கருவுற்ற முட்டைகள் மிகவும் நுண்ணிய வளர் குஞ்சுகளை வெளிப்படுத்தும். மேலும் இவை பல நிலைகளைக் கடந்து நண்டுக் குஞ்சுகளாக மாறுகின்றன. இந்த



*மீனவர்கள் நண்டுகளை வலைகளிலிருந்து விடுவிக்கின்றனர்*

நீலக்கால் நண்டுகள் இந்தியாவில் தீவுகள் நிறைந்த கடல் பகுதிகளில் காணப்படுகின்றன.

நமது இந்தியாவிற்கு இயற்கை 8000 கிலோ மீட்டர் அளவுள்ள கடற்கரைப் பகுதியை நன்கொடையாகத் தந்துள்ளது. இதில் தமிழகத்தில் மட்டும் 1,076 கிலோ மீட்டர் கடற்கரை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பி.எஸ்.சி நண்டுகள் கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் கிடைத்தாலும், அதிக அளவில் கிடைப்பது மேற்குக் கடற்கரைப் பகுதியிலாகும். அதிகமாகக் கிடைக்கும் இடங்கள் கச் வளைகுடா மற்றும் கார்வார் கடற்பகுதியிலாகும். ஒரு வருடத்தில் 500 முதல் 700 மெட்ரிக் டன் நண்டுகள் கிடைக்கின்றன. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் இவை அதிகமாகக் கிடைக்கும் மூன்று இடங்கள் மன்னார் வளைகுடா, பால்க் வளைகுடா, மற்றும் பால்க் பகுதி முதல் மேற்கு வங்கம் வரையுள்ள பகுதிகளாகும். மன்னார் வளைகுடா மற்றும் பால்க் வளைகுடா பகுதிகளில் மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ள கிராமங்கள் அதிகமாக உள்ளன. காக்கிநாடா கடற்கரைப் பகுதியில் மழைக்காலங்களில் மட்டும் அதிகமான நண்டுகள் கிடைக்கும். இங்கு ஒரு வருடத்தில் சராசரியாக 80-100 மெட்ரிக் டன் நண்டுகள் கிடைக்கின்றன. பால்க் வளைகுடாவில் சராசரியாக 500 மெட்ரிக் டன் நண்டுகள் கிடைக்கின்றன. மன்னார் வளைகுடாப் பகுதிகளில் ஒரு வருடத்தில் சராசரியாக 2,000 - 3,000 மெட்ரிக் டன் நண்டுகள் கிடைக்கின்றன. மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள கிராமங்களிலும் அதிக அளவில் நண்டுகள் பிடிபடுகின்றன.

இவ்வாறு பிடிபட்ட நண்டுகளில் 20 சதவீதம் உள்நாட்டுத் தேவைக்காகவும் மீதியுள்ள 80 சதவீதம் சர்வதேச அளவிலான பல சந்தைகளுக்கும் அனுப்பப்படுகிறது. இதில் 40 சதம் அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகிறது. மேலும் இந்த நண்டுகள் உலக அளவில் பெரிதும் விரும்பப்படுவதால், இந்த ரகத்தின் வளர்ச்சி நிலையான அளவில் இருக்க வேண்டியது அவசியமாகும். மேலும் இவை வளர்வதற்கான கடல் சார்ந்த சூழல், மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழல் போன்றவற்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

## நண்டு இறைச்சி பதப்படுத்துவோர் சங்கம், இந்தியா

## (Crab Meat Processors Association (CMPA) India)

நண்டு இறைச்சி பதப்படுத்துவோர் சங்கம், இந்தியா, என்பது நண்டு ஏற்றுமதியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு Fishery Improvement Programme என்ற திட்டத்தின் அடிப்படையில், அமெரிக்காவிலுள்ள National Fisheries Institute, Crab Council என்ற நிறுவனத்தின் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

கொள்கை 1 : புள்ளி நண்டுகளின் உயிரியல் தகுநிலை – அவற்றின் நிலைப்புத்தன்மை மற்றும் முட்டைகளின் சினைத் திறன்.

கொள்கை 2 : உயிரியல் வாழ்க்கைச் சூழல் தகுநிலை – சுற்றுச் சூழலின் நிலை மற்றும் பிடிபடுவதை பகுத்தாய்வது.

கொள்கை 3: புள்ளி நண்டு சார்ந்த நிர்வாகத் தகுனிலை – நீலக்கால் நண்டு சேகரிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்கள், ஏஜெண்ட்கள், தொழில் நிறுவனங்கள், நிர்வாகிகளான கிராமத் தலைவர்கள், உள்ளாட்சி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மாநில மீன்வளத்துறை, மற்றும் மாநில அரசு.

இதன் தலைவர்: Mr. Ch.Kishore Kumar, Director, Sandy Bay SEafoods ( India) Private Limited and Vice Chairman of MPEDA

# தேசீய மீன்வள நிறுவனம் கிராப் கவுன்சில்
# (National Fisheries Institute (NFI) Crab Council)

என்.எஃப்.ஐ. கிராப் கவுன்சில் என்பது நண்டுகளின் நிலைப்பாட்டில் கவனம் செலுத்தும் சங்கமாகும். இதில் உறுப்பினராக உள்ளவர்கள் அமெரிக்கா இறக்குமதி செய்யும் 85 சத நண்டுகளை வழங்குவதில் பங்குபெறுகின்றனர். இந்த கிராப் கவுன்சில் அமெரிக்காவின் கடலுணவு சார்ந்த கம்பெனிகளின் அமைப்பு என்பதால், இறக்குமதி யாகும் நண்டுகள் தரத்தில் சர்வதேச வர்த்தகத்திற்கு ஏற்றவிதத்தி லும் உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியையும் கவனிக்கிறது. என்.எஃப்.ஐ. கிராப் கவுன்சில் என்பது, நீளக்கால் நண்டு வளர்ப்பதில் உலக அளவில் நிர்ணயிக்கப்பட்ட நிர்ணயங்கள் மற்றும் செயல் முறைகளைப் பின்பற்றி மீன்வளர்ப்பு மற்றும் இந்த தொழிலின் முன்னேற்றம், உயிரியல் வாழ்க்கைச் சூழல் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய அமைப்பாகும். இந்த கவுன்சிலின் முக்கிய மான குறிக்கோள் இந்த நண்டுகளின் இனப்பெருக்கம், இவை வளர்வதற்கு ஏற்ற சூழல், மேலும் இதனை நம்பி இருக்கும் சமுதாயத்தினரின் எதிர்காலம் இப்போது மட்டுமல்ல எப்போதும் வளமாக இருக்கும்படி கண்காணித்தல் போன்றவையாகும். இந்த கவுன்சில் இதன் உறுப்பினர்களிடையே கல்வி, ஆதரித்து வாதாடுதல், மற்றும் ஒருமைப்பாடு போன்றவற்றை வளர்த்து உலக அளவிலான நிலைப்பாட்டை உறுதி செய்ய செயலாற்றுகிறது. இந்த கவுன்சில் 2009ல் 85 சவீதமுள்ள ஏற்று மதியை செய்யும் 17 நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

என்.எஃப்.ஐ. கிராப் கவுன்சில் இதன் செயல்பாடுகளை இந்த நண்டுகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகளிலும் அபிவிருத்தி, மற்றும் நிலைத்தன்மையான வளர்ச்சிக்காக நிதி உதவி செய்து விரிவாக்க திட்டமிட்டுள்ளது. தற்போது இந்த கவுன்சில், 2007ல் தொடங்கப்பட்ட Indonesian Association of Crab Producers, 2009ல் தொடங்கப்பட்ட Philippine Association of Crab Producers, Inc, 2010ல் தொடங்கப்பட்ட Vietnam Association of Seafood Exporters and Processors, 2012ல் தொடங்கப்பட்ட Thai Crab Product Group, மற்றும் Indian Crab Product Group மற்றும் 2013ல் தொடங்கப்பட்ட Seafood Exporters Association of Sri Lanka ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் நிலையில் மீன் வளத்துறையின் வளர்ச்சிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் திட்டங்களுக்காக இந்த கவுன்சில் வழங்கும் ஒப்புதலின் அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படும். இந்தியாவில் 2017ல் சி.எம்.பி.எ. என்ற பெயரில் புள்ளி நண்டு மீன் வளர்ப்புத் திட்டத்தின் செயல்பாடுகள் துவக்கப்பட்டுள்ளது.



*பாங்காங் கூட்டத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து கலந்து கொண்ட பிரதிநிதிகள்*

மேலும் நிலைப்புத்தன்மைத் திட்டத்திற்காக உள்நாட்டு நிறுவனங்களே மேற்பார்வையிடும் விதத்திலான நேரடியான நிதி உதவி மட்டுமின்றி, இந்த கவுன்சில் 2011ல் அளவு குறைந்த, முதிர்ச்சியடையாத நண்டுகளை உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து குறைந்தது 8 செ.மீ அளவில் உள்ளவற்றை வாங்கிட விதிகளில் மாற்றம் செய்யப்பட்டது.

### மீன் வள மேம்பாட்டுத் திட்டம்
### (Fishery Improvement Programme (FIP)

மீன் வள மேம்பாட்டுத்திட்டம் என்பது National Fisheries Institute of Crab Council, USA மூலமாக அனைத்து நண்டு ஏற்றுமதி செய்யும் நாடுகளில் அமுலாக்கப்பட்ட திட்ட மாகும். இதனை 2017ல் இருந்து ஸ்ரீலங்கா, மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் பின்பற்றின. தமிழகத்தில் அதிகமாக நண்டு உற்பத்தி மையமான தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வெள்ளப்பட்டியில் முதன் முதலில் துவங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியாவில் நண்டு உற்பத்தியாகும் அனைத்து இடங்களிலும் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் துவக்கமாக தமிழ் நாட்டில் பிடிபடும் நண்டுகளின் கணக்கெடுக்கும் வேலை தொடங்கியது. இந்த திட்டம் கடந்த ஜூலை 2017 முதல் முனைவர்.ஜி.சஞ்சீவிராஜ் அவர்கள் ஒருங்கமைப்பாளராகவும் மேலும் இரண்டு கள அலுவலர்களும் நியமிக்கப்பட்டனர். இந்த குழு தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வெள்ளப்பட்டி மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பல மீனவ கிராமங்களில் இந்த நண்டு கணக்கெடுப்பு வேலை நடைபெற்றது.

தினமும் கிடைக்கும் நண்டுகளின் எடையளவு,



சி.எம்.எஃப்.ஆர்.ஐ.யின் மண்டபம் மண்டல அலுவலகத்தில் ஜனவரி 6, 2018ல் நடைபெற்ற பங்குதாரர்களின் கூட்டம்




கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

தரையிறங்கியதில் ஒவ்வொரு ரக நண்டுகளின் விபரம், அவற்றுள் ஆண், பெண் நண்டுகளின் எடை, ஆண் மற்றும் பெண் நண்டுகளின் சராசரி எண்ணிக்கை, நண்டுகளின் நீளம் அதிலும் ஆண், பெண் நண்டுகளின் விகிதம், மற்றும் ஏகதேசமாகத் தரையிறங்கும் நண்டுகளின் அளவு (இந்த மொத்த அளவில் ஒன்று முதல் இரண்டு சதவீதமே இருக்கும்) மற்றும் பொரித்த முட்டைகளின் நிலை போன்றவை கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும்.

## இது தொடர்பான நடவடிக்கைகள்

ஸ்ரீலங்கன் கிராப் எக்ஸ்போர்ட் கவுன்சிலின் ஒருங்கமைப்பாளர் முனைவர். ஸ்டீவ் கிரஷ் என்பவரிடமிருந்து இந்த திட்டம் தொடர்பான பின்னணித் தகவல்களைச் சேகரிப்பதற்காக ஜீலை 17 - 23, 2017, தேதிகளில் இந்த திட்டத்தின் ஒருங்கிணைப்பாளரான முனைவர்.ஜி.சஞ்சீவிராஜ், ஸ்ரீலங்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். திரு.கிரோர்குமார், தலைவர், மற்றும் முனைவர்.ஜி.சஞ்சீவிராஜ் ஆகியோர் செப்டம்பர் 29-30, 2017 தேதிகளில் பாங்காங்கில் நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் ஆசிய நாடுகளிலிருந்து வந்திருந்த பல ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர். இந்த கூட்டத்திற்கு திரு.அப்துல் கஃபார் இந்த திட்டத்தின் பொறுப்பாளர் தலைமை தாங்கினார். இதனைத் தொடர்ந்து நவம்பர் 7, 2017ல் கொச்சியிலுள்ள சி.எம்.எஃப்.ஆர்.ஐ.யில் இந்த திட்டம் தொடர்பாக விரிவாக கலந்துரையாட ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் முனைவர். சுனில் முகமது, மொலுஸ்கன் ஃபிஷ்ரிஸ் டிவிசன், முனைவர். ஜொசிலீன் ஜோஸ், முதன்மை விஞ்ஞானி முனைவர். வினோத் மலயிலேத்து, முனைவர்.ரஞ்சித் சுசீலன், திரு.கிஷோர் குமார், முனைவர்.சஞ்சீவிராஜ், முனைவர்.அஜிதாகுமார், மற்றும் மயில்வாகனன், முனைவர்.ஜேம்ஸ் டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பங்குதாரர்கள் கூட்டம்

மண்டபத்திலுள்ள சி.எம்.எஃப்.ஆர்.ஐ.யின் மண்டல அலுவலகத்தில் பங்குதாரர்களின் கூட்டம் ஒன்று ஜனவரி 6, 2018ல் நடத்தப்பட்டது. இதன் முதல் கூட்டம் கொச்சியில் சி.எம்.எஃப். ஆர்.ஐ.யின் தலைமையகத்தில் நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில், சிறந்த நிர்வாக முறைகள், நண்டுகளின் நிலையான பெருக்கத் திற்குக் காரணமான இளம் குஞ்சுகள் மற்றும் பருவமடையாத குஞ்சுகள் போன்றவற்றைப் பிடிக்காமல் எவ்வாறு தவிர்ப்பது, போன்ற நுட்பங்கள் கலந்துறையாடப்பட்டது. மேலும் முட்டைகளுடன் இருக்கும் நண்டுகளை அதிகமான பாதிப்பு இல்லாமல் உடனடியாக அவற்றை மீண்டும் கடலுக்குள் விடுவதன் அவசியம் போன்றவை விவாதிக்கப்பட்டன. மேலும் மாநில மீன்வளத்துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளின் மேற்பார்வையில் நண்டுகளின் இனப்பெருக்கம் மற்றும் அவற்றை வளர்க்கும் முறைகளை ஆய்வு செய்து, அதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் 13 சி.எம்.பி.எ. உறுப்பினர்கள், நான்கு சி.எம்.எஃப்.ஆர்.ஐ. விஞ்ஞானிகள், ஒரு எம்.எஸ்.சி. இந்தியா பிரதிநிதி, தமிழக மீன்வளப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர், தமிழக மீன்வளத்துறையின் அதிகாரிகள் மூன்று பேர், மண்டபம், பாம்பன், தேவிபட்டணம், காரங்காடு மற்றும் தொண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் 17 பேர் ஆகியோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். இது தொடர்பான அடுத்த கூட்டம் மார்ச் 26, 2018ல் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

நிறைவாக, மீன் வள மேம்பாட்டுத்திட்டம் முழு முனைப்புடன் செயல்படத் தொடங்கியுள்ளது. இதில் ஆரம்பக் கட்டமாக நண்டுகள் குறித்தான விரிவான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர்ச்சியாக நடைபெறும் திட்டம் என்பதால் நண்டுகளின் நிலைப்புத்தன்மையில் அதிக கவனம் செலுத்தப்படும். குறிப்பாக இந்த வகை நண்டுகளை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு உதவிகரமாகவும், முக்கியமாக இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுப்பதாகவும் இருக்கும்.

# கடல் பாதுகாப்பு:
# ஒரு சமுதாயம் சார்ந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி



*முனைவர். வினோத் ரவீந்திரன் எஸ்.சி.ஓ நெட்பிஷ் உரையாற்றும் காட்சி*

கடந்த ஜனவரி 19, 2018ல் மண்டபத்தில் கடல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை எம்.எஸ்,சுவாமிநாதன் ரிசர்ச் பவுண்டேசன் மற்றும் இந்திய கரையோரக் காவல் படை ஆகியோர் இணைந்து நடத்தினர். இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் 102 மீனவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

திரு.சங்கர் ராஜ், படைத்தலைவர் (ஜே.ஜி) 79 எ.சி.வி., செல்வி. ஷிரின் சந்திரன், துணை படைத்தலைவி, முனைவர். திவ்யபாரதி, சர்ஜன் லெப்டினண்ட், ஐ.சி,ஜி.எஸ். மண்டபம், திரு. ஐசக் ஜெயக்குமார், துணை இயக்குனர், தமிழக மீன்வளத்துறை, முனைவர். வினோத் எஸ். ரவீந்திரன், எஸ்.சி.ஓ. நெட்பிஷ், திரு. கெவி குமார், திட்ட உதவியாளர், எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப். , திரு. கோபிநாத், உதவி இயக்குனர், (மீன்பிடிப்பு) மண்டபம், திரு.சாதிக், ஆய்வாளர், (மீன்பிடிப்பு) , மண்டபம், திரு.ஜோதிபாசு மற்றும் திரு.ராஜ்குமார், உதவி ஆய்வாளர், கரை பாதுகாப்புக் குழு, மண்டபம், மற்றும் திரு.தங்கவேலு, மீனவர் சங்கத் தலைவர், ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கடற்கரை பாதுகாப்பு அதிகாரிகள், பேரிடர் எச்சரிக்கை மற்றும் கடலில் கரைப் பாதுகாப்பின் உதவியைப் பெறுதல் மீன்பிடிப் படகுகளில் தானியங்கித் தகவல் தொடர்பு முறையின் அவசியம் கடலில் இருக்கும் போது சீன வி.எச்.எஃப். செட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சனைகள் கடலில் செல்லும் போது தேவைப்படும் கடல் பாதுகாப்புக் கருவிகள் போன்றவற்றை விவரித்தனர். இந்த நிகழ்ச்சியின் போது பல்வேறு விதமான கடல் பாதுகாப்பு கருவிகளை இயக்கும் விதம் கற்பிக்கப்பட்டது. மீனவர்களுக்கு கடற்கரை மற்றும் மீன்பிடித் துறைமுகங்களை சுத்தமாக வைப்பது, கழிவுகளை முறைப்படி அப்புறப்படுத்துதல், கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாத்து அவற்றை காக்க வேண்டியதன் அவசியம் போன்றவை விளக்கப்பட்டது. முனைவர். வினோத் எஸ்.ரவீந்திரன், பலவிதமான மீன்பிடி முறைகளையும், மீன் இனங்கள் அழியாது பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் போன்றவற்றை விளக்கினார். மேலும் அவர் ஆழ்கடல் மீன்பிடித்தலால் கடலின் வாழ்வியல் சூழல் எவ்வாறு மாசுபடும்




கடல் பாதுகாப்புக் கருவிகளை பயன்படுத்தும் செயல்விளக்கம் நடைபெறுகிறது



நிகழ்ச்சி நடைபெறும் காட்சி

என்பதையும் விவரித்தார். திரு.கெவி குமார், மற்றும் திரு. சலாம், ஆகியோர் PAN India Fisher Friend mobile Application, என்பது மீனவர்களுக்கு எவ்விதம் உதவுகின்றது என்பதை எடுத்துக் கூறினர். மேலும் அங்குள்ள மருத்துவக் குழு உயிர்காக்கும் வழிமுறைகளை எடுத்துக் கூறினர். மேலும் இதயத்துடிப்பு தொடர்பான வீடியோ காட்சிகளும் மீனவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. மீனவர்களுக்கு மருத்துவ குழுவினர் முன்பாகவே இதனை பயன்படுத்தும் விதங்களும் கற்பிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவாக மீனவர்களுக்கு பாதுகாப்பு முறைகளை விளக்கும் கையேடுகள் வழங்கப்பட்டன.

# கடலிலிருந்து பிளாஸ்டிக்களை அகற்றுவதற்காக 'சுசித்வா சாகரம்' திட்டம்

ஜாய்சி வி.தாமஸ், என்.ஆர்.சங்கீதா மற்றும் வி.வி.அஃப்சல்

நெட்ஃபிஷ் – எம்.பி.இ.டி.எ

எம்.பி.இ.டி.எ.வின் விரிவாக்கப்பிரிவான நெட்பிஷ் சுசித்வா சாகரம் எனும் தூய்மையான கடல் எனும் திட்டத்தை துவங்கியுள்ளது. கொல்லத்திலுள்ள படகு இயக்குவோர் சங்கத்தின் ஆதரவுடன் செயல்படும் இத்திட்டத்தின் மூலம் கேரளத்தில் சக்திகுளங்கரா மற்றும் நீண்டகரா மீன்பிடித் துறைமுகப்பகுதிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. நிலப்பகுதிகளிலிருந்தும், மனித செயல்பாடு காரணமாகவும் அதிக அளவிலான பிளாஸ்டிக் கழிவுகள் கடலை மாசுபடுத்தியுள்ளன. எனவே, நெட்பிஷ் தனது விரிவாக்கத்திட்டத்தின் ஒரு பகுதியாக மீனவர்களுக்கிடையே கடலில் பிளாஸ்டிக் சேர்வதால் ஏற்படும் தீய விளைவுகளை எடுத்துக் கூறிவருகிறது. மேலும் இது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சிகளின் மூலமாக கடலில் சேரும் இந்த கழிவுகள் கடலுக்கடியில் சுமார் 50 மீட்டர் ஆழம் வரை மீன்பிடி வலைகளுக்குத் தடையாகவும், மீன்பிடிப் படகுகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் இருப்பதை மீனவர்களுக்கு எடுத்துக் கூற முடிந்தது.

எனவே நெட்பிஷ், கொல்லத்திலுள்ள படகு இயக்குவோர் சங்கத்துடன் இணைந்து கேரளத்தில் கொல்லத்திலுள்ள நீண்டகரை துறைமுகத்தில் பிளாஸ்டிக்குகளைச் தூளாக்கும் நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட மீன்வளத் துறை, துறைமுக பொறியியல் துறை, சுசித்வா மின் கேரளா, கிளின் கேரளா கம்பெனி, மற்றும் எஸ்.எ.எஃப். ஆகிய நிறுவனங்களின் ஆதரவுடன் இந்த திட்டத்தை பெரிய அளவில் செய்திட உள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப்பின் போது காணப்படும் பிளாஸ்டிக்களின் அளவு குறித்து மீனவர்களிடம் அடிப்படைத் தகவல்களை நெட்பிஷ் சேகரித்துள்ளது. இதற்கான திட்ட வரைவை நெட்பிஷ் தயாரிக்க அதற்கு படகு இயக்குவோர் சங்கம் ஆதரவு தந்தது. பின் இது தொடர்பாக கேரளா சுசித்வா மினுடன் கலந்து பேசி, மீன்பிடித் துறைமுகமான சக்திக்குளங்கரையில் பிளாஸ்டிக்குகளைச் தூளாக்கும் எந்திரங்களை அமைப்பதற்கான நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைக் கோரியது. இதனைத் தொடர்ந்து படகு இயக்குவோர் இந்த திட்டம் குறித்த அறிவிப்பை ஜூலை 22, 2017ல் நடைபெற்ற அவர்களது 43வது ஆண்டு விழாவின் போது வெளியிட்டது. இந்த நிகழ்ச்சிக்கு கேரள மாநில மீன்வளத் துறை அமைச்சர் திருமதி. மெர்சிகுட்டியம்மா சிறப்பு விருந்தாளியாகக் கலந்து கொண்டார்.

கடலில் மீனவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்க பயன்படுத்தும்படியான நெட்பிஷ் தயாரித்த மாதிரிப் பை ஒன்று காண்பிக்கப்பட்டது. இது குறித்து அமைச்சரிடம் பேசியபோது இந்த திட்டத்திற்கு மீன்வளத்துறை மட்டுமல்லாது மற்றுள்ள துறைகளின் ஆதரவுடன் இதனை செயல்படுத்துவது என்ற போது இந்த திட்டம் பெரிய அளவிலான திட்டமாக உருமாறியது. ஆகஸ்ட் 5, 2017ல் நெட்பிஷ் தயாரித்த பைகளில், படகுகளில் சென்று சேகரித்த பிளாஸ்டிக் கழிவுகளை பெற்றுக் கொண்ட அமைச்சர், இந்த திட்டத்தைத் துவக்கி வைத்தார்.



*கேரள மாநிலத்தின் மீன்வளத்துறை அமைச்சர் திருமதி. ஜே. மெர்சிகுட்டியம்மா பிளாஸ்டிக் கழிவுப் பைகளைக் கையில் வாங்கி இந்த திட்டத்தைத் துவக்கி வைக்கும் காட்சி.*

துறைமுக பொறியியல் துறை நீண்டகரை துறைமுகத்தில் ஒரு இடத்தைத் தேர்வு செய்தது. இங்கு சேகரித்த பிளாஸ்டிக் கழிவுகளைப் பிரித்தெடுத்து தூளாக்குவதற்கும் மறுசுழற்சி செய்வதற்கும் வேண்டிய வசதிகளை செய்து கொடுத்து இதனை சுசித்வா மின் கவனித்துக் கொள்ளும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கெனத் தேவையான நிதி உதவி பலவிதமான துறைகளிலுமிருந்து தாராளமாகக் கிடைத்தது. நீண்டகரை மீன்பிடி துறைமுகத்தில் கடந்த நவம்பர் 20,2017ல் இந்த திட்டம் துவங்கப்பட்டது.

### இந்த திட்டத்தில் பங்கேற்ற நிறுவனங்கள்



*மீனவர்களிடமிருந்து பிளாஸ்டிக் கழிவுப் பைகளை ஏற்று நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டது*

நெட்பிஷ் மற்றும் படகு இயக்குனர்கள் சங்கம், கொல்லம், ஆகியோர் இத்திட்டத்தின் துவக்க கால கூட்டாளிகள் என்றாலும் பல்வேறு நிறுவனங்களும் இதன் குறிக்கோள் கண்டு இதில் ஆர்வத்துடன் பங்கேற்றன. அந்த நிறுவனங்களின் பெயர்கள் அட்டவணை 1ல் தரப்பட்டுள்ளது.

| Sl. No. | Department / Agencies | Role in the Suchitwa Sagaram Project |
|---|---|---|
| 1 | Suchitwa Mission, Kerala | Financial support for the establishment of plastic shredding unit at Neendakara fisheries harbour and training to members of SAF |
| 2 | Clean Kerala Company | Technical support before and after the establishment of the shredding uit |
| 3 | Harbour Engineering Department (HED) | Providing area and electrical connection for installation of Plastic shredding unit at Neendakara fisheries harbour |
| 4 | Society for Assistance to Fisherwomen (SAF), Department of Fisheries, Kerala | Running of the shredding unit including manpower, salary to the workers, electricity charges, etc. |
| 5 | Boat Operators Association, Kollam District | a. Overall monitoring and running of the porject<br>b. Bringing and collection of plastic from sea<br>c. Deployment of sufficient manpower to look after the programme |
| 6 | NETFISH-MPEDA | Supply of eco-friendly bags for waste collection, awareness stickers to fishing boats & conducting awareness training for fishes |

## திட்ட செயல்பாடு

இந்த திட்டம் மீன்வளத்துறையால் மீனவப்பெண்களுக்கு உதவும் குழுவிலிருந்து (Society for Assistance for Fisherwomen) 30 பெண்களைத் தேர்வு செய்து இந்த திட்டத்தில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டனர். இவர்கள் மீன்பிடிப்படகுகளிலிருந்து பிளாஸ்டிக் கழிவுப் பைகளைச் சேகரித்து அவற்றை ரகவாரியகப் பிரித்து, கழுவி சுத்தம் செய்து, உலர்த்தி, அவற்றை தூளாக்குவது போன்ற வேலைகளை மேற்கொள்வர். (படங்களில் பார்க்கலாம்)

இந்த பைகளைச் சேகரிப்பதற்காக பல இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. இத்துடன், இதர பஞ்சாயத்துகளைச் சேர்ந்தவர்களும் இது போன்று சேகரித்த கழிவுகளை கொண்டு வந்துதருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதன் மூலம் இதற்கான இயந்திரம் முழு நேரமும் இயங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும். இதில் பணியாற்றுபவர்களுக்கு மேலும் தேவையான பயிற்சி வழங்கப்படுகிறது. இதில் கழிவுகளைக் கையாளும் விதம், பிரித்தெடுப்பது மற்றும் தூளாக்குவது போன்றவையாகும். இதற்கான ஏற்பாட்டை மீன்வளத் துறையும், கிளீன் கேரளா மினும் செய்துள்ளது.

நெட்பிஷ் 2000 பாதுகாப்பான சாக்குகளை ஒவ்வொரு மீன்பிடிப் படகிற்கும் இரண்டு வீதம் வழங்கியது. இதில் மீனவர்கள் மீன்பிடிக்கும் சமயத்தில் கிடைக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை அவற்றில் சேகரித்து வைப்பர். சக்திக்குளங்கரை துறைமுகத்தில் ஒவ்வொரு நாளும் சுமார் 40 முதல் 50 கிலோ எடையுள்ள 30 - 40 சாக்குகள் வருகின்றன. இந்த திட்டத்தில் பயன்படுத்தபடும் எந்திரங்களின் பட்டியல் அட்டவணை 2ல் தரப்பட்டுள்ளது. தூளாக்கப்படும் கழிவுகள் சாலை அமைப்பு பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

## எதிர்கால விரிவாக்கம்

இந்த திட்டம் எதிர்காலத்தில் பல்வேறு விதமான நவீன மான மாற்றங்களுடன் செயலாக்கம் பெறவுள்ளது. இந்த திட்டம் அடுத்துள்ள பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் அறிமுக



*கேரள மாநிலத்தின் நிதி அமைச்சர் முனைவர் டி.எம்.தாமஸ் ஐசக், நீண்டகரை துறைமுகத்தில் பிளாஸ்டிக்குகளைத் தூளாக்கும் நிலையத்தைத் துவக்கி வைக்கும் காட்சி.*

மாகவுள்ளது. நிலப்பகுதிகளில் கிடைக்கும் பிளாஸ்டிக் கழிவுகளையும் சேகரிப்பதால் இதில் பயன்படுத்தப்படும் எந்திரங்கள் முழு அளவில் பயன்படுத்தப்படும். வேறுபல பகுதிகளிலும் இந்தத் திட்டம் தொடரவேண்டும் என்பதால் இது தொடர்பான கூட்டங்கள் நடத்தப்படுகின்றது. இதனால் அருகிலுள்ள கடல் பகுதிகளிலும் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்படுவதால் கடல் தூய்மை என்பது உறுதியாக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த திட்டத்தின் துவக்க நிலையிலேயே மிகுந்த ஆதரவைப் பெற்றதோடு கடல் பகுதிகளும் சுத்தமாகி வருகிறது என்பதே உண்மை.

| Sl. No. | Item | Purpose |
|---|---|---|
| 1 | Shredding machine of capacity 1 ton/day | To shred the plastic wastes |
| 2 | Sharpening machine | To sharpen the blade of teh shredding machine |
| 3 | Hydraulic Bailing machine | To keep the plastic bottles separately from the plastic wastes collected. This will be given to other parties for recycling. |



1 படகுகளிலிருந்து பிளாஸ்டிக் கழிவுப் பைகள் சேகரிக்கப்படுகிறது.



2 பிளாஸ்டிக்களை ரகவாரியாகப் பிரித்தெடுக்கும் பகுதிகளுக்கு தள்ளு வண்டிகளில் கொண்டு செல்லப்படுகிறது



3 கழிவுகள் பிரித்தெடுக்கப்படுகிறது



4 பிளாஸ்டிக் கழிவுகள் கழுவி சுத்தப்படுத்தப்படுகிறது



5 சுத்தம் செய்து உலர்த்தப்பட்ட கழிவுகள் தூளாக்கும் பகுதிக்கு கொண்டுவரப்படுகிறது



6 தூளாக்கும் எந்திரங்களில் கழிவுகள் இடப்படுகிறது



7 தூளாக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள்



8 மேற்கொண்டுள்ள பயன்பாட்டிற்காக சேமிக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொடிகள்

# புவனேஷ்வரில் மேம்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாடு ஆய்வகம்



திரு.கலிகேஷ் நாராயன் சிங் தியோ, பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் எம்.பி.இ.டி.எ.வின் அத்தாரிட்டி உறுப்பினர் புவனேஷ்வரிலுள்ள தரக் கட்டுப்பாடு ஆய்வகத்தை மரு.எ.ஜெயத்திலக், தலைவர், எம்.பி.இ.டி.எ. மற்றும் சிறப்பு விருந்தினர்கள் உடனிருக்க துவக்கிவைத்தார்

பலவிதமான பிரச்சனைகள் இருந்தாலும் ஒடிசாவிலிருந்து கடலுணவுப் பொருட்களின் ஏற்றுமதி படிப்படியாக அதிகரித்துக் கொண்டே இருந்த்து. L.vannamei யின் அறிமுகத்தைத் தொடர்ந்து 2011 முதல் இறாலின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அதிகரித்தது. ஆன்டிபயாடிக் இல்லாத தரமான இறால் உற்பத்தி என்பதே எம்.பி.இ.டி.யின் குறிக்கோள் என்பதால் எம்.பி.இ.டி.எ. இந்த தருணத்தில் புவனேஷ்வரில் உள்ள தரக்கட்டுப்பாடு ஆய்வகத்தை மேலும் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது.

Tandem mass spectrometry மற்றும் Liquid chromatography போன்ற நவீன எந்திரங்களை ஆய்வகத்தில் அமைத்தது. இந்த ஆய்வகம் என்.எ.பி.எல். ஒப்புதல் மற்றும் இ.ஐ.சி.யின் அங்கீகாரம் பெற்றதாகும்.

இந்த நவீனமயமாக்கப்பட்ட ஆய்வகத்தை பயன்பாட்டிற்கு வழங்குவதற்காக பிப்ரவரி 19, 2018ல் புவனேஷ்வரில் ஒரு வாங்குவோர் – விற்போர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. அதுசமயம் இந்த ஆய்வகத்தை எம்.பி.இ.டி.எ.வின். தலைவர் மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. துவக்கி வைத்தார். இதில் ஏற்றுமதியாளர்களும், பண்ணை வைத்திருப்பவர்களும், மீன் குஞ்சுகள் பொரிப்பகங்களை வைத்திருப்பவர்களும், அரசு அலுவலர்களும் இதில் கலந்து கொண்டனர். இவர்களின் சந்திப்பின் போது ஏற்பட்ட கலந்துரையாடலில் கடலுணவு ஏற்றுமதி தொடர்பாகத் தேவையான வளர்ச்சித் திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டன.

மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. இந்த நவீனமான ஆய்வகத்தைத் துவக்கி வைத்து பேசும் போது, மீன் உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியாளர்களும் தரமான மீன்வகைகளை ஏற்றுமதிக்குத் தந்ததால் முதல் முறையாக நம் நாடு ஆறு பில்லியன் டாலர் மதிப்புள்ள கடலுணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடிந்தது என்று கூறினார். எதிர் உயிரிகளைக் கண்டறியும் விதத்திலான ஆய்வகம்



***கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்***

ஒன்று தேவை என்பது பலரும் விரும்பியதாகும். நாட்டிலுள்ள இது போன்ற வசதி படைத்த ஆய்வகங்களுள் இது ஆறாவது ஆய்வக மாகும். மீன் வளர்ப்பவர்கள், ஏற்றுமதியாளர்கள், பதப்படுத்துவோர் போன்ற அனைவரும் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் இந்த ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒடிசா அரசின் வேளாண் உற்பத்தி ஆணையாளர், திரு. காகன் குமார் தால், இ.ஆ.ப. ஒடிசாவைச் சார்ந்த ஏற்றுமதி யாளர்களின் பலநாள் வேண்டுதலான இந்த ஆய்வகம் இன்று செயல்பாட்டிற்கு வந்தது. இந்த நவீனமான ஆயுவகத்தை எம்.பி.இ.டி.எ. அமைத்துக் கொடுத்ததால் அவர்களின் வேண்டுதல் நிறைவேறியது என்று கூறினார். திரு.எல்.என்.குப்தா, கூடுதல் செயலாளர், எம்.எஸ்.எம்.இ. ஒடிசா, ஏற்றுமதியாளகளுக்கு இந்த ஆய்வகத்தை மிகவும் உகந்த நேரத்தில் அமைத்துக் கொடுத்த எம்.பி.இ.டி.எ.விற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு, இந்த மாநிலத்திலிருந்து மீன் ஏற்றுமதி 20 மடங்கு அதிகரித்துள்ளது என்றும், 2016-17 ஆம் ஆண்டில் அதிகமான ஏற்றுமதி செய்ததால் மத்திய வர்த்தக அமைச்சகம் இந்த மாநிலத்தை சாம்பியன் மாநிலம் என்று பாராட்டியுள்ளதை எடுத்துக்கூறினார். சிறந்த ஏற்றுமதிக் கொள்கைகள் இருப்பதால் இந்த மாநிலத்தில் ஒரு லட்சம் கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்ய முடிகிறது என்றும் கூறினார்.

திரு.கலிகேஷ் நாராயன் சிங் தியோ, பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் எம்.பி.இ.டி.எ.வின் அத்தாரிட்டி உறுப்பினர் ஏற்றுமதித் தரமிக்க உற்பத்தி பெருக இதுபோன்ற நவீனமான ஆய்வக வசதி என்பது இந்த நேரத்தில் தேவையானது என்று குறிப்பிட்டார்.



***மரு.எ.ஜெயத்திலக், தலைவர், எம்.பி.இ.டி.எ. இந்த ஆய்வகத்தை அர்ப்பணிக்கும் காட்சி***

திரு.பி.கே. சாஹு, அத்தாரட்டி உறுப்பினர், எம்.பி.இ.டி.எ. திரு.வி.பத்மநாபன், தேசியத் தலைவர், எஸ்.இ.எ.ஐ. திரு.தாரா ராஜன் பட்நாய்க், தேசிய துணைத் தலைவர், எஸ்.இ.எ.ஐ. முனைவர்.கமலேஷ் மிஷ்ரா, தலைவர், எஸ்.இ.எ.ஐ. ஒடிசா பகுதி திரு.பிரதாப் ரஞ்சன் ரோட், இணை இயக்குநர், மீன்வளத்துறை, முனைவர். ஜே.கே.சந்தரே, இயக்குநர், சி.ஐ.எஃப்.எ. புவனேஷ்வர், திரு.எஸ்.கே. ஜெனா, ஓ.எ.எஸ். இயக்குநர், ஏற்றுமதி மற்றும் மார்க்கெட்டிங், ஒடிசா, திரு.பி.ஸ்ரீகுமார், செயலாளர், எம்.பி.இ.டி.எ. முனைவர்.எம்.கே.ராம்மோகன், இணை இயக்குநர், (மார்க்கெட்டிங்) எம்.பி.இடி.எ. திரு.கே.வி.பிரேம்தேவ், துணை இயக்குநர், எம்.பி.இடி.எ. திரு.கே.சண்முக ராவ், சி.இ.ஓ. நாக்சா காகிநாடா, செல்வி.கே.மிஷ்ரா, உதவி இயக்குநர்,




***திரு.எல்.என்.குப்தா, இ.ஆ.ப. கூடுதல் தலைமைச் செயலாளர்,எம்.எஸ்.எம்.இ. ஒடிசா ஆய்வகத் துவக்கவிழாவின் போது வாழ்த்துரை வழங்கினார்***

இ.ஐ.எ. புவனேஷ்வர், ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மேலும் புவனேஷ்வரிலுள்ள மண்டல மற்றும் துணை மண்டல அலுவலக அதிகாரிகளும், ஏற்றுமதியாளர்கள், முன்னணி மீன்வளர்ப்பு விவசாயிகளும், மீன்வளர்ப்பு விவசாயிகள் நலச் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், பொரிப்பகங்களின் உரிமை யாளர்களும், மாநில மீன்வளத்துறை அதிகாரிகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். திரு.பி.ஸ்ரீகுமார், செயலாளர், எம்.பி.இடி.எ. கூட்டத்தினரை வரவேற்றார். மேலும் அவர் தனது வரவேற்புரையில் புவனேஷ்வரிலுள்ள தரக்கட்டுப்பாடு ஆய்வகம் என்.எ.பி.எல்லால் ஐ.எஸ்.ஓ/ ஐ.இ.சி.17025 தரம் போன்றவற்றிற்கான ஒப்புதல் பெற்றது மற்றும் இ.ஐ.சி. இந்தி யாவின் அங்கீகாரமும், ஐ.எஸ்.ஓ. 9001:2008 சான்று பெற்றது என்று கூறினார்.

திரு.தாரா ரஞ்சன் பட்நாய்க், தேசிய துணைத் தலைவர், எஸ்.இ.எ.ஐ. மற்றும் புவனேஷ்வரிலுள்ள ஃபால்கன் மெரைன் எக்ஸ்போர்ட்ஸின் தலைமை நிர்வாக இயக்குநர், அனைத்து விவசாயிகளும் சி.எ.எ. பதிவு மற்றும் எம்.பி.இ.டி.எ.வின் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திரு.வி.பத்மநாபன், தேசியத் தலைவர், எஸ்.இ.எ.ஐ. முனைவர்.கமலேஷ் மிஷ்ரா, தலைவர், எஸ்.இ.எ.ஐ. (ஒடிசா பகுதி திரு.பி.கே. சாஹு, அத்தாரட்டி உறுப்பினர், எம்.பி.இ.டி.எ, திரு.பிரதாப் ரஞ்சன் ரோட், இணை இயக்குநர், மீன்வளத்துறை, ஆகியோர் இந்த நிகழ்ச்சியின் போது உரையாற்றினர். இந்த ஆய்வகத்தின் பொறுப்பாளர், இந்த ஆய்வகத்திலுள்ள வசதி களையும், ஆய்வு செய்யும் முறைகளையும் விளக்கினார்.

முனைவர்.எம்.கே.ராம்மோகன், இணை இயக்குநர், (மார்க்கெட்டிங்) எம்.பி.இடி.எ. நன்றி கூறினார்.

## வாங்குவோர் - விற்போர் சந்திப்பு

வாங்குவோர் – விற்போர் நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை திரு.பி.ஸ்ரீகுமார், செயலாளர், எம்.பி.இ.டி.எ. வரவேற்றார். அவர் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதன் அவசியத்தைக் கூறினார். இதனால் இருதரப்பினரும் ஒரே இடத்தில் சந்தித்து நேரடியாக வர்த்தகம் செய்யும் வாய்ப்பு கிடைப்பதை எடுத்துக் கூறினார். மேலும் வாங்குவோர் தங்களுக்குத் தேவையான தரத்தை வெளிப்படுத்துவதால் விவசாயிகள் அதனைப் பின்பற்றி சுமுக மான வர்த்தகம் செய்ய வாய்ப்புகள் உருவாகும். இதனால் கட்டு மான விலை கிடைக்கும். திரு.யு.சி.மொகாபத்ரா, துணை இயக்குநர், மண்டலப் பிரிவு, எம்.பி.இ.டி.எ. புவனேஷ்வர் இந்த நிகழ்ச்சியை ஒருங்கமைத்தார்.

விவசாயிகள், விலைகளில் ஏற்படும் ஏற்றதாழ்வு, இடுபொருட்களின் தரம், கச்சாப் பொருட்கள் மற்றும் ஐஸ் விநியோகம் தொடர்பான சந்தேகங்களை எழுப்பினர். இவற்றிற்கு திரு.அஜயா தாஸ், அனுபவமிக்க ஏற்றுமதியாளர், மற்றும் முனைவர்.கமலேஷ் மிஷ்ரா, தலைவர், எஸ்.இ.எ.ஐ. போன்றோர் இந்த விவாதங்களில் கலந்து கொண்டு விவசாயிகளின் கேள்விகளுக்குறிய பதில்களை கூறினர். மேலும் பொதுவாக பி.சி.ஆர். சோதனை செய்யப்பட்ட இறால் குஞ்சுகளைப் பயன்படுத்த வேண்டும். தரமான தீவனம், சிறந்த மேலாண்மை முறைகளைப் பின்பற்றுதல் மற்றும் மருந்துகள் மற்றும் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தாமல், எதிர் உயிரி அற்ற இறால்களை உற்பத்தி செய்வது அவசியம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. திரு.தம்படா என்.விஷ்ணு, உதவி இயக்குநர், எம்.பி.இ.டி.எ. புவனேஷ்வர் நன்றி கூறினார்.

# படகுப் பயணத்தின் போது சாஷிமி ரக சூரை மீன்களை கையாளும் பயிற்சி



நெட்பிஷ் ஒருங்கிணைப்பாளர் மீனவர்களுக்கு பயிற்சி தருகின்றார்

சாஷிமி என்பதன் பொருள் மூலமீன் என்பதாகும். இது ஜப்பானில் பாரம்பரியமான ஒரு மீன் உணவாகும். இது அதிக விலையுள்ள மீனிலிருந்து செய்யப்படுவதாகும். சிவந்த இறைச்சியைக் கொண்ட சூரை மீன்களின் மெலிதான துண்டுகளைப் பயன்படுத்தி செய்யப்படும் உணவு சாஷிமி மீன் என்று அழைக்கப்படும். குறிப்பிட்ட ரக மீன்கள் மட்டும் கையாளப்பட்டு, புதியதாக பேக் செய்யப்படுபவை மட்டுமே சாஷிமி சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்ய உகந்தவையாகும். நெட்பிஷின் ஒரு திட்டமாக மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி தருவதற்காக ஒரு படகுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் படகுப் பயணத்தின் போது இந்த மீன்களைக் கையாளும் விதம், சாஷிமிக்காக சூரை மீன்களைப் பதப்படுத்தும் முறைகள், போன்றவற்றில் பயிற்சி தருவதே குறிக்கோளாகும்.

ஜனவரி 2018ல் 18 மற்றும் 30 தேதி ஆகிய இரண்டு நாட்களில் படகுப் பயணத்தின் போது சூரை மீன்களைக் கையாளும் பயிற்சி மீனவர்களுக்கு விசாகபட்டிணத்தில் புதிமடக்கா என்ற இடத்தில் தரப்பட்டது. இதில் ஆர்வமுள்ள 24 மீனவர்கள் கலந்து கொண்டனர். திரு.ஹனுமந்த ராவ், நெட்பிஷின் மாநில ஒருங்கிணைப்பாளர் இந்த பயிற்சியின் போது சாஷிமி ரக சூரை மீன்களைக் முறையான சுகாதார முறைகளைப்



சூரை மீன்களைக் கையாளும் போது வைத்திருக்க வேண்டிய கருவிகளை மீனவ பயிற்சியாளர்களுக்கு அடையாளம் காட்டப்படுகிறது

பின்பற்றி படகுகளில் கையாளும் முறைகளை விளக்கினார். இது போன்ற படகுப் பயணத்தின் போது எடுத்துச் செல்லவேண்டிய அத்தியாவசியமான கருவிகள் அனைத்தும் இதில் கலந்து கொண்ட மீனவப் பயிற்சியாளர்களுக்கு நேரடியாகக் காண்பித்து விளக்கப்பட்டது. மேலும் மீனைக் கொல்லும் விதம், அவற்றின் குருதியை வடிப்பது, செவுள் நீக்கம் செய்வது, துண்டுகளாகுவது, அவற்றை ஐஸ்சில் வைத்து பாதுகாப்பது மற்றும் சேமிப்பது போன்றவை இந்த பயிற்சியின் போது மீனவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது.

# ஏற்றுமதி தொடர்பான நீர் உயிரின வளர்ப்பு பண்ணைகளுக்கு ஜி.பி.எஸ் வசதியை எம்.பி.இ.டி.எ. துவக்கியது



*விசாகபட்டிணத்தில் நடைபெற்ற பார்ட்னர்ஷிப் சம்மிட் 2018ல் ஜி.பி.ஏஸ். அடிப்படையிலான குறிப்புகள் எடுக்கும் முறை துவக்கிவைக்கப்படும் காட்சி*

எம்.பி.இ.டி.எ. ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள நீர் உயிரின வளர்ப்பு பண்ணைகளுக்கு ஜி.பி.எஸ். மூலமாக தகவல்களை சேகரிக்கும் வசதியை செய்து கொடுத்துள்ளது. இதனால் நீர் உயிரின வளர்ப்பு பண்ணைகளை பயன்படுத்தும் பொது மக்களால் எளிதில் கண்டறிய முடியும். இதனால் இறால் மற்றும் ஏற்றுமதித் தரமிக்க மீன்களைப் பயன்படுத்துவதில் ஏதேனும் தடை மற்றும் தகாத செயல்முறைகளை எளிதில் கண்டறிய முடியும்.

இந்த திட்டத்தின் மூலம் எம்.பி.இ.டி.எ. இறால், ஷெல்பிஷ், மற்றும் ஏற்றுமதிக்கேற்ற மீன்களை

உற்பத்தி செய்யும் அனைத்து பண்ணைகளையும் பதிவு செய்வதன் மூலமாக அவர்களுக்குத் தரப்படும் அடையாள அட்டையின் மூலமாக குறிப்பிட்ட பண்ணை தொடர்பான அனைத்து விவரங்களும் பொதுவாக்கப்படும்.

பிப்ரவரி 25,2018ல் ஆந்திரப்பிரதேச மாநில முதல்வர் திரு.சந்திரபாபு நாயுடு மற்றும் திரு. கே.ஹரிபாபு , பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பல பிரமுகர்களின் முன்னிலையில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் திரு. சுரேஷ் பாபு, அவர்கள் இந்த அடையாள அட்டைகளை நீர் உயிரின வளர்க்கும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்தார்.

மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தலைவர், எம்.பி.இ.டி.எ. இந்த பதிவு முறையால் ஒவ்வொரு நீர் உயிரின வளர்ப்புப் பண்ணையும், குஞ்சு பொரிக்கும் நிலையங்களுக்கும் திட்ட உதவிகளை எளிதில் தர இயலும் மேலும் அவர்களின் இருப்பிடத்தையும் அடையாளம்காண முடியும் என்று கூறினார். இது போன்ற பதிவு செய்த பண்ணைகள் தரக்குறைவான மீன்களை விற்பனை செய் திருந்தால் அவற்றிலுள்ள குறைகளைக் கண்டறிந்து, அவற்றை அனுப்பியவர்களின் விவரத்தை எளிதில் கண்டறிய இயலும் என்று தெரிவித்தார்.

அறுவடைக்கு முன்பு தடை செய்யப்பட்ட எதிர் உயிரிகளான Chloramphenicol மற்றும் Nitrofuran போன்றவை இருந்தால் அவை அந்த அடையாள அட்டையுடன் பதிவு செய்யப்படும்.



*பார்வையாளர்களில் ஒரு பகுதி*



மரு.எ.ஜெயத்திலக் இ.ஆ.ப. தலைவர், எம்.பி.இ.டி.எ. விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுடன்



பதிவு செய்த மீன் வளர்ப்பு பண்ணைகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது

ஐரோப்பிய யூனியனுக்கு ஏற்றுமதியாகும் இறால் ரகங்களுக்கு இந்த அறுவடைக்கு முன்பான சான்றிதழ் அவசியமாகும். மரு.எ.ஜெயத்திலக் பேசும் போது, அமெரிக்கா, ஜப்பான், மற்றும் ஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகள் விதித்துள்ள கடுமை யான தரக்கட்டுப்பாட்டு முறைகளுக்கு பதில் கூறும் விதமாக இந்த வசதிகள் உதவியாக இருக்கும் என்று கூறினார். மேலும் இதன் மூலம் ஒவ்வொரு நிலைகளிலும் ஏற்றுமதியாகும் பொருட்களைப் பற்றிய விவரத்தை அறிந்து கொள்ள இயலும். இதனால் இறுதியில் இந்த பொருட்களைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கும் தாங்கள் வாங்கிய பொருட்களைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

எம்.பி.இ.டி.எ. ஏற்கனவே 1,48,321 ஹெக்டேரில் இறால் வளர்க்கும் 65,595 பண்ணைகளைக் குறித்த தகவல்களை ஜி.பி.எஸ். மூலமாக சேகரித்து வைத்துள்ளது. சுமார் 1,95,994 ஹெக்டேர் பரப்பில் செயல்படும் 1,00,000 பண்ணைகளில் 54,165 பண்ணைகளின் விவரங்கள் சேகரித்துள்ளது.

இந்த அடையாள அட்டைகளை ஐந்து ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம். இந்த அட்டைகள் ஆங்கிலத்திலும் சம்பந்தப்பட்ட மாநில மொழிகளிலும் அச்சிடப்பட்டிருக்கும்.

# சூழலுக்கேற்ற நீடித்த நீர் உயிரின வளர்ப்பு வாய்ப்புகளுக்கான பயிற்சி




*திரு.பி. பிரமேஷ்வர் ராவ், உதவி இயக்குனர், மண்டலப் பிரிவு, விஜயவாடா, பயிற்சி வகுப்பில் உரையாற்றுகின்றார்*

எம்.பி.இ.டி.எ.வின் விஜயவாடாவிலுள்ள மண்டல அலுவலகம் சூழலுக்கேற்ற நீடித்த நீர் உயிரின வளர்த்தலில் உள்ள வாய்ப்புகள் தொடர்பான மூன்று நாட்களுக்கான பயிற்சியை ஜனவரி 23-25, 2018 தேதிகளில் நடத்தியது. இந்த பயிற்சி கிருஷ்ணா மாவட்டத்தில் நாகையலங்கா மண்டலில் கம்மனமோலு என்ற கிராமத்தில் நடைபெற்றது. இதில் சூழலுக்கேற்ற நீடித்த மற்றும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட நீர் உயிரின வளர்ப்பில் முக்கியமாக பலதரப்பட்ட மீன் இனங்களை வளர்க்கும் முறைகள் கற்பிக்கப்பட்டன. இதில் ஐந்து பெண்கள் உட்பட 20 பேர் கலந்து கொண்டனர்.

இந்த பயிற்சி திட்டத்தை கம்மனமோலு கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் திரு. கொக்கிலிகட்டா வெங்கடதிரி துவக்கி வைத்தார். திரு.பி.நரசிம்ம ராவ், உதவி இயக்குனர், திரு.பி. பிரமேஷ் வர் ராவ், உதவி இயக்குனர், மண்டலப் பிரிவு, விஜயவாடா, திரு.வி.ரத்னபிரகாஷ், திட்ட உதவியாளர் (மீன் வளம்) கே.வி.கே.கனுரு, திரு.பி.சுரேஷ், உதவி இயக்குனர், மீன் வளர்ப்பு, அவானிகட்டா, திரு.ஜே.வெங்கட ரமணா, மண்டல ஒருங்கிணைப்பாளர், திரு.ஜி.ஸ்ரீனிவாசலு, கள மேற்பார்வையாளர், மண்டல பிரிவு, விஜயவாடா, ஆகியோர் குளம் அமைத்தல், நீர் மற்றும் மண் தர மேலாண்மை, தரமான குஞ்சுகளைத் தேர்வு செய்வது, தீவன நிர்வாகம், இறால் வளர்ப்பில் புரோபயோடிக்சின் பயன்பாடு, உயிர் பாதுகாப்பு முறைகள், பல் முகமான மீன்வளர்ப்பிற்கு ஆந்திர மாநிலத்திலுள்ள வாய்ப்புகள், மீன் சேகரிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து தர மேலாண்மை முறைகள், மற்றும் சுகாதாரம் பேணுதல் போன்ற தலைப்புகளில் வகுப்புகள் நடத்தப்பட்டன. நிறைவு நாளில் பயிற்சியாளர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு தகுந்த விளக்கம் தரப்பட்டது.

திரு. கொக்கிலிகட்டா வெங்கடதிரி நிகழ்ச்சியில் நிறைவுரையாற்றினார். அப்போது எம்.பி.இ.டி.எ. செய்துவரும் அபிவிருந்தி நடவடிக்கைகளுக்கு நன்றி கூறினார். மேலும் மீன் வளர்ப்பவர்களுக்கு பயன் தரும் இது போன்ற பயிற்சி வகுப்புகள் எதிர்காலத்திலும் நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும் பஞ்சாயத்துத் தலைவரின் முன்னிலையில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழும், உதவித் தொகையும் வழங்கப்பட்டது. திரு.ஜி.ஸ்ரீனிவாசலு நன்றி கூறினார்.

# நெல்லூரில்
# இறால் பண்ணைகளின் நிலை




*திரு.அர்ச்சிமன் லகிரி, துணை இயக்குனர், மண்டலப்பிரிவு, விஜயவாடா தொழில் நுட்ப பிரிவில் உரையாற்றுகின்றார்*

நெல்லூரில் இறால் பண்ணைகளின் நிலைகுறித்த விவசாயிகள் கூட்டமொன்றை எம்.பி.இ.டி.எ, சேட்லைட் செண்டர், நெல்லூர் ஏற்பாடு செய்தது இந்த கூட்டம் நெல்லூர் மாவட்டத்தில், கங்கபட்டிணம் கிராமத்தில் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி தேவி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கம் இறால் பண்ணைகளில் தற்போது பின்பற்றப்படும் தொழில் நுட்ப வளர்ச்சி குறித்து ஆய்வு செய்வது, இதில் வரும் பிரச்சனைகள், மீன் வளர்ப்பில் பல்முனை முயற்சிகளை மேற்கொண்டு பெருகி வரும் மீன் மற்றும் மீன் சார்ந்த பொருட்களின் தேவையை சரிசெய்யும் வித்த்தில் தரமான உற்பத்தியை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிக்காக அதிகரிக்கும் முறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் சுமார் 125 பேர் கலந்து கொண்டனர்.

திரு.அர்ச்சிமன் லகிரி, துணை இயக்குனர், மண்டலப்பிரிவு, விஜயவாடா கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை வரவேற்றார். இவர் தமது வரவேற்புரையில் எம்.பி.இ.டி.எ. தரமான இறால்களை நமது நாட்டில் உற்பத்தி செய்வதற்காக மேற்கொண்டுவரும் முயற்சிகளை விவரித்தார். மேலும் அவர் ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் கடலுணவுப் பொருட்களின் மீது கடுமையான விதிமுறைகளை ஏற்படுத்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, குஞ்சு பொரிக்கும் போதும், மற்ற செயல்பாடுகளிலும் பயன்படுத்தப்படும் இடு பொருட்களை கவனத்துடன் கையாள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விவசாயிகள் கூட்டத்தை திரு.பி.ஹனுமந்தா ராவ், தலைவர், ஸ்ரீசாமுண்டீஸ்வரி தேவி அகுவா பார்மர்ஸ் கிளப், கங்காபட்டிணம், துவக்கி வைத்து பேசும் போது அகுவா ஆய்வகங்கள் இறால் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு நீடித்த இறால் வளர்த்தல் தொடர்பாக உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் அரசு சார்ந்த நிதி உதவி மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் தகுதியான ஆய்வகப் பணியாளர்களை நியமனம் செய்து நம்பகமான ஆய்வு அறிக்கைகளை வழங்க வேண்டும் என்றார்.

திரு.பி.ஷபீர் கான், செயலாளர், ஆந்திர மாநில இறால் விவசாயிகள் சங்கம், நெல்லூர் தமது வாழ்த்துரையில் எம்.பி.இ.டி.எ. மேற்கொண்டுவரும் முயற்சிகளைப் பாராட்டினார். இது போன்ற செயல்களால் தரமான, பாதுகாப்பான இறால்களை உற்பத்தி செய்ய இயலும் என்று கூறினார். இதனால் இந்தியா இறால் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் என்றார். விலையில் ஏற்படும்



*நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்*

வீழ்ச்சி நிலை குறிப்பாக சிறிய இறால் விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கலாம் என்பதால் தொடர்ச்சியான வாங்குவோர் – விற்போர் சந்திப்புகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதாரட்டி உறுப்பினரும் சிறப்பு விருந்தினருமான திரு.எஸ். சுரேஷ் ரெட்டி தொழில் நுட்ப வகுப்புகள் நடைபெறும் போது உடனிருந்தார். அவர் தமது வாழ்த்திரையின் போது குஞ்சு பொரிப்பகங்கள் உயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும் நல்ல செயல்பாட்டு முறைகளைப் பின்பற்றி தரமான இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்து மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கூறினார். அதுபோல் இறால் வளர்ப்பவர்களும்




*திரு.பி.ஹனுமந்தா ராவ், தலைவர், ஸ்ரீசாமுண்டீஸ்வரி தேவி அகுவா பார்மர்ஸ் கிளப், கங்காபட்டிணம், நிகழ்ச்சியைத் துவக்கி வைக்கின்றார்*




*அதாரட்டி உறுப்பினர் திரு.எஸ். சுரேஷ் ரெட்டி, ஆந்திரப் பிரதேசம், கூட்டத்தில் உரையாற்றுகின்றார்*

ஆபத்துகளை உருவாக்கும் இடு பொருட்களைப் பயன்படுத்தாமல் ஏற்றுமதி தரமிக்க இறால்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

முனைவர். பி.ஹரிபாபு, பேராசிரியர், அசோசியேட் டீன், மீன்வளக் கல்லூரி, முதுகூர், நெல்லூர், கலந்துரையாடல் நிகழ்ச்சியில் நோய் மேலாண்மை மற்றும் மீன் வளர்த்தலில் உயிர்பாதுகாப்பு பற்றி பேசிய போது ஒரு வெற்றிகரமான மீன் வளர்த்தலுக்குத் தேவையான தொழில் நுட்ப மற்றும் நிர்வாக முறைகள் பற்றிய விவரங்கள் அனைத்தையும் எடுத்துக் கூறினார். திரு.அர்ச்சிமன் லகிரி, துணை இயக்குனர், மண்டலப்பிரிவு, விஜயவாடா பேசும்போது மீன் பண்ணைகளைப் பதிவு செய்து கொள்வதன் அவசியத்தை எடுத்துக் கூறினார். இதுவரை தங்களை எம்.பி.இ.டி.எ.வில் பதிவு செய்து கொள்ளாதவர்கள் உடனே பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் மீன் வளர்க்கும் போது பயன்படுத்தும் இடுபொருட்களை கவனத்துடன் கையாள வேண்டும் என்/றார். ஏனென்றால் மீனை இறக்குமதி செய்யும் நாடுகள் கடுமையான தரக் கோட்பாடுகளை விதித்து வருகின்றன. எனவே மீன் குஞ்சு பொரிப்பகங்களை வைத்தி ருப்பவர்களும், மீன் வளர்ப்புப் பண்ணை வைத்திருப்பவர்களும் தரமான மீன் வகைகளை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தி இந்தியாவை தரமான மீன்களை உற்பத்தி செய்யும் முன்னணி நாடாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திரு.பிரமேஷ்வர ராவ், உதவி இயக்குனர், மண்டலப் பிரிவு, விஜயவாடா, இறால் ஏற்றுமதியில் இந்தியா எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்பில் பேசினார். மீன்களை இறக்குமதி செய்த நாடுகள் அவற்றை மீண்டும் திருப்பி அனுப்பக் காரணம் அந்த மீன்களில் உயிர்க் கொல்லித் தன்மை இருப்பதால் மட்டுமே என்று கூறினார். இந்திய இறால்களைத் தடை செய்யும் நிலை உருவாவதால் மீன் விவசாயிகள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இறக்குமதி செய்யும் நாடுகள் அவர்களின் நாட்டிற்குள் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் எதையும் உள்ளே நுழைய அனுமதிக்க மாட்டார்கள். எனவே தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வேண்டும். தேவையற்ற இரசாயன இடு பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது. இறக்குமதி செய்யும் நாடுகள் விரும்பும் தரத்துடன் மீன்களை உற்பத்தி செய்தால் மட்டுமே மீன் வர்த்தகம் நீடித்திருக்கும்.

திரு.பி.ஸ்ரீனிவாச ராவ், உதவி திட்ட மேலாளர், ஆர்.ஜி.சி.எ. எம்.பி.இ.டி.எ. பேசும் போது ஏற்றுமதித் தரமிக்க பல்வேறு வகையான மீன்களை ஆர்.ஜி.சி.எ அறிமுகம் செய்துள்ள விவரத்தைக் கூறினார். மேலும் நண்டு வளர்ப்பதில் எதிர்கால வாய்ப்புகளை எடுத்துக் கூறினார்.

நிறைவாக திரு.டிநந்தா கிஷோர், மண்டல ஒருங்கிணைப்பாளர், குழுக்களை அமைப்பதால் ஏற்படும் நன்மைகளைக் கூறி பல விதமான திட்டங்களின் சிறப்புகளை எடுத்துக் கூறினார். முனைவர். கணேஷ், உதவி இயக்குனர், எம்.பி.இ.டி.எ. நெல்லூர் நன்றி கூறினார்.

# பெல்காமில் சூழலுக்கேற்ற நீடித்த மீன்வளர்ப்பு வாய்ப்புகளுக்கான பயிற்சி



திரு.விஜயகுமார் சி.யரகால், துணை இயக்குனர், எம்.பி.இ.டி.எ. பயிற்சி வகுப்பில் உரையாற்றும் காட்சி

கர்நாடகத்தில் பெல்காம் மாவட்டத்தில் நீர் உயிரி வளர்ப்பில் ஒரு சில சிறிய பண்ணைகளைத் தவிர மற்றவற்றின் வளர்ச்சியும் செயல்பாடுகளும் இனியும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

பெல்காம் மாவட்டம் மூன்று பெரிய நதிகளின் அரவணைப்பில் கரும்பு, தினை போன்ற விவசாயம் நடைபெறும் வளமான பகுதி யாகும். மேலும் இங்கு கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுவதால் அதிக அளவில் இரசாயன உரங்களும் பூச்சி மருந்துகளும் பயன்படுத்தப்பட்டதால் மண்ணில் அமிலத்தன்மை அதிகமாகவும், உப்புச் சத்து குறைவாகவும் ஆனது.

எனவே இந்த வேளாண் நிலங்களில் மீன் வளர்ப்பதைத் தவிர வேறு எந்த விவசாயமும் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த சூழலில் சுற்றுச் சூழலுக்கேற்ற நீடித்த மீன்வளர்ப்பு என்பது பற்றிய மூன்று நாள் பயிற்சி வகுப்பு ஜனவரி 3-5, 2018ல் கர்நாடகத்தில், பெல்காம் மாவட்டத்தில், சிக்கோடி என்ற ஊரில் நடத்தப்பட்டது. சுமார் 19 விவசாயிகள் இந்த பயிற்சியில் கலந்து கொண்டனர்.

திரு.விஜயகுமார் சி.யரகால், துணை இயக்குனர், மீன் வளர்ப்பதற்கான இடத் தேர்வு, குளங்கள் அமைத்தல் போன்றவை குறித்து விவரித்தார். திரு. சஞ்சய் அர்கரே, உதவி இயக்குனர், மீன் வளர்ப்பு, சிக்கோடி, இப்பகுதியில் தற்போதைய மீன் பிடித்தலின் நிலைப்பாடு குறித்து விளக்கினார். திரு.ஜி.ராமர், இளநிலை தொழில்நுட்ப அதிகாரி, குளங்களை நிர்மாணித்தல், நீரின் தரம், இறால் குஞ்சுகளை சேமித்து வைத்தல், தீவன நிர்வாகம் மற்றும் அறுவடை தொடர்பான தொழில் நுட்பங்களை எடுத்துக் கூறினார்.

சிக்கோடியிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஒரு மீன் பண்ணையை பயிற்சியாளர்கள் பார்வையிட்டனர். இங்கு மீன்களை வளர்ப்பதில் பின்பற்ற வேண்டிய செயல்முறைகளை எடுத்துக் கூறினார். மீன் வளர்ப்பதில் பல்வேறு விதமான மீன் ரகங்களைப் பயன்படுத்தும் விதத்திலான வீடியோ படக்காட்சி இந்த பயிற்சியின் போது காண்பிக்கப்பட்டது.

தியோரு.ஜி.டி.நாயக், துணை இயக்குனர், மற்றும் திரு.வசந்த், ஹெக்டே, முதுநிலை உதவி இயக்குனர், பெல்காம், நிறைவு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இந்த விழாவின் நிறைவு நாளில் சிறப்பு விருந்தினர் வெற்றி பெற்றவர்களுக்காக பரிசுகளை வழங்கினர். மேலும் சிறப்பு விருந்தினர், இதில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுகளை விளக்கினார்.

# கார்வாரில் சூழலிற்கேற்ற இறால் பண்ணை பயிற்சி



*மீன் வளர்ப்பு பண்ணைகளை பயிற்சியாளர்கள் பார்வையிடுகின்றனர்*

கர்நாடகத்தில், உத்தரகன்னடாவில் கார்வாருக்கருகிலுள்ள பாத் என்ற கிராமத்தில் டாக்டர்.அம்பேத்கார் பவன் ஹாலில் சுற்றுச் சூழலிற்கேற்ற இறால் வளர்ப்பு எனும் பொருளில் மூன்று நாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. கார்வார் நகராட்சிக் குழுவின் வேண்டுதலின் பேரில் நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்பில் உத்திர கன்னடா மாவட்டத்தில் பாத், நந்தன்கட்டா பகுதியைச் சேர்ந்த 20 பேர் கலந்து கொண்டனர்.

திரு.தேவானந் கனேகர், கார்வாரிலுள்ள எஸ்.சி./எஸ்.டி. பிரிவின் தலைவர், இந்த நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். இந்த பயிற்சியின் போது, மீன் வளர்ப்பிற்கான இடத்தேர்வு, குளத்தின் வடிவமைப்பு, நிர்மானம், உயிர்ப் பாதுகாப்பு முறைகள், மீன் குஞ்சு சேகரிப்பு முதல் அறுவடை வரை, சிறந்த நிர்வாக முறைகள், இறால் வளர்ப்பு, பல்முனை மீன் வளர்ப்பு, நண்டு வளர்த்தல், ஜிலேபி கெண்டை வளர்த்தல், பொருளாதாரம் மற்றும் நிதி உதவி போன்றவை இந்த பயிற்சியின் போது கற்பிக்கப்பட்டது. திரு.எஸ்.சிரோத்கர், இளநிலை தொழில்நுட்ப அதிகாரி, திரு.விஜயகுமார் யரகல், துணை இயக்குநர், எம்.பி.இ.டி.எ. மற்றும் திரு. வெங்கட்ராமன் ஹெக்டே, துணை இயக்குனர், திரு.ஸ்ரீபத் குல்கர்னி, எ.எஃப்.டி.ஓ. மாநில மீன் வளர்ப்புத்துறை, ஆகியோர் பயிற்சி வகுப்புகளை எடுத்தனர்.

ஜனவரி, 18,2018ல் இறால் வளர்ப்பிலுள்ள நடைமுறைகளைத் தெரிந்து கொள்ள கனாஸ்கிரி, காட்வாத்,



*பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்டது.*

மடிபாக், ஆகிய கிராமங்களுக்கு பயிற்சியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களிடம் நேரடியாக உரையாடி, பயிற்சியாளர்கள் தங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டனர்.

திருமதி.லீலாபாய் தனேகர், துணைத் தலைவர், நகராட்சிக் குழு, கார்வார், ஜனவரி 19ல் நடைபெற்ற நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். இவர் பேசும் போது எஸ்.சி./எஸ்.டி. பிரிவினருக்காக எம்.பி.இ.டி.எ. ஏற்பாடு செய்த இந்த பயிற்சி வகுப்பு பாராட்டிற்குறியது என்று கூறியவர், பயிற்சியாளர்களும் ஆர்வத்துடன் முன்வந்து மீன் வளர்ப்பது தொடர்பான குழுக்கள் அல்லது சங்கங்களை அமைப்பது அவசியம் என்று கேட்டுக் கொண்டார். திரு.விஜயக்குமார் யாரகல், துணை இயக்குனர், எம்.பி.இ.டி.எ. பேசும் போது இது தொடர்பான எம்.பி.,இ.டி.எ.வின் ஆதரவு உறுதியாகக் கிடைக்கும் என்றார்.

திரு.விதல்லஞ்சேகர் மற்றும் திருமதி. ரூபாஹல்ஸ்வர், ஆகியோர், விவசாயிகளின் சார்பில் எம்.பி.இ.டி.எ.விற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவு நாளில் திரு.எஸ்.சிரோத்கர், இளநிலை தொழில்நுட்ப அதி காரி,எம்.பி.இ.டி.எ. நன்றி கூறினார்.

# நீடித்த மீன்வளர்ப்பிற்குத் தயாராகும் அதானி விவசாயிகள்



*பக்குவமான மீன்கள் சேகரிக்கப்படுகிறது*

கர்நாடகத்தில் பெல்காவி மாவட்டத்திலுள்ள அதானி என்ற இடம் மண்வளம் குறைந்து, குறைந்த உப்புத் தன்மைவாய்ந்த பூமியானாலும்நிறைவானநீர்வளமிக்கதுஎன்பதுவெளிப்படையான விசயம். இதனை மனதில் கொண்டு சிக்கோடியிலுள்ள மீன்வளத்துறையினரிடம் விருப்பமுள்ள விவசாயிகளுக்கு பயிற்சி தர விண்ணப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் எம்.பி.இ.டி.எ.வின் கார்வாரிலுள்ள மண்டலப் பிரிவு அதானிப் பகுதி விவசாயிகளுக்கு சுற்றுச் சூழலிற்கேற்ற நீடித்த மீன்வளர்ப்பிற்கான பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்தியது.

பிப்ரவரி 15 - 17, 2018 தேதிகளில் நடைபெற்ற மூன்று நாள் பயிற்சி வகுப்பு மைஸ் கம்ப்யூட்டர் இன்ஸ்டிடியூட் ஹாலில் நடைபெற்றது. திரு. ஜி.ராமர் மற்றும் திரு.எஸ்.எம்.ஷிரோத்கர், இளநிலை தொழில்நுட்ப அதிகாரி, எம்.பி.இ.டி.எ. மற்றும் மாநில அரசின் மீன்வளத்துறை அதிகாரிகள் இந்த பயிற்சி வகுப்புகளை நடத்தினர். குஞ்சு தேர்வு, சேமித்து வைத்தல், தண்ணீரின் தரம், தீவன நிர்வாகம், பக்குவமான இறால்களை சேமித்தல், பன்முகம ான மீன்வளர்ப்பு முறைகள், போன்றவை விளக்கப்பட்டது. மேலும் பலவகையான மீன்களின் ரகம் குறித்த வீடியோபடமும் பயிற்சியாளர்களுக்குக் காட்டப்பட்டது.



**பயிற்சியில் கலந்து கொண்டவர்கள்**




***திரு.சஞ்சய் அர்கேரி, உதவி இயக்குனர், மீன் வளத்துறை, சிக்கோடி, பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் உதவித் தொகை வழங்கும் காட்சி***

மேலும் பயிற்சியாளர்கள் ஒரு மீன் பண்ணைக்கும், ஒரு நீர்த் தேக்கத்திற்கும் அழைத்து செல்லப்பட்டனர். அங்கு மீன் வளர்ப்பு முறையில் உள்ள நடைமுறை செயல்களை நேரடியாகக் கண்டு, தெரிந்து கொள்ளும் வாய்ப்பு பயிற்சியாளர்களுக்குக் கிடைத்தது.

திரு.சஞ்சய் அர்கேரி, உதவி இயக்குனர், மீன் வளத்துறை, சிக்கோடி, சிறப்பு விருந்தினராக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். மேலும் பயிற்சியாளர்கள் எம்.பி.இ.டி.எ. இந்த பயிற்சி வகுப்பை ஏற்பாடு செய்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். மேலும் இந்த பயிற்சி தங்களுக்கு மீன் வளர்ப்பிலுள்ள நுட்பங்களையும், நல்ல விதத்தில் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தையும் தூண்டியுள்ளது என்று கூறினர். இதில் கலந்து கொண்ட 17 பயிற்சியாளர்களுக்கு சான்றிதழும் உதவித்தொகையும் வழங்கப்பட்டது. திரு.எஸ்.எம்.ஷிரோத்கர், இளநிலை தொழில்நுட்ப அதிகாரி, எம்.பி.இ.டி.எ. நன்றி கூறினார்.

# எஸ்.சி./ எஸ்.டி. பிரிவினருக்கான மீன் வளர்ப்பு பயிற்சி



பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள்

புவனேஷ்வரிலுள்ள எம்.பி.இ.டி.எ.வின் மண்டலப் பிரிவு காரினாசி மற்றும் அடுத்துள்ள பகுதிகளில் வசிக்கும் எஸ்.சி. /எஸ்.டி. பிரிவினருக்கு இறால் மற்றும் பலவிதமான மீன் பிடிப்பு முறைகளைப் பற்றிய மூன்று நாள் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தது. பிப்ரவரி 6-8. 2018 தேதிகளில் இந்த பயிற்சி வகுப்பு கேந்தரப்பாரா மாவட்டத்தில் காரினாசி கிராமத்திலுள்ள ரெட் கிராஸ் சொசைட்டி ஹாலில் நடைபெற்றது.

திரு யு.சி.மொகப்பத்ரா, துணை இயக்குனர், இந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். அவர் பயிற்சியாளர்களிடம் புதிய மீன் வளர்ப்பு நுட்பங்களைத் தெரிந்து கொண்டு ஏற்றுமதித் தரமிக்க மீன் களை உற்பத்தி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பயிற்சியாளர்களுக்கு மீன் வளர்ப்பு தொடர்பான அறிமுகம் தரப்பட்டது. மேலும் மீன் வளர்ப்பிலுள்ள பல்வேறு முறைகள், எம்.பி.இ.டி.எ.வின் செயல்பாடுகள் மற்றும் மீனவர்களுக்கான திட்டங்கள் போன்றவற்றை எடுத்துக் கூறினார். இரண்டாம் நாளில்,



திரு.எஸ்.துர்காராவ், எஃப்.எஸ். பயிற்சியின் போது வகுப்பு எடுக்கும் காட்சி

திரு.நரேஷ் தம்படா, உதவி இயக்குனர், மீன் வளர்ப்பிற்கான இடத்தேர்வு, குளங்கள் அமைத்தல், எம்.பி.இ.டி.எ.வில் விவசாயிகள் தங்களைப் பதிவு செய்து கொள்ளும் முறை, மற்றும் இறால் வளர்ப்பிலுள்ள பொருளாதாரம் போன்றவை விளக்கப்பட்டது.

திரு.எஸ்.துர்கா ராவ், கள மேற்பார்வையாளர், குளம் தயார் செய்தல், தண்ணீரின் தர நிர்வாகம், மற்றும் மண் பரா மரிப்பு, தீவன நிர்வாகம், குஞ்சுகளைத் தேர்வு செய்தல், அவற்றை சூழலுக்கேற்றவாறு உருவாக்குதல், நோய்க் கட்டுப்பாட்டு முறைகள், உயிர் பாதுகாப்பு முறைகள் போன்றவற்றை தெளிவாகக் கூறினார். மேலும் பயிற்சியாளர்களுக்கு களி நண்டு மற்றும் திலோப்பியா மீன் வளர்ப்பு போன்றவையும் கற்றுத் தரப்பட்டது. நீடித்த மீன் வளர்ப்பிற்கான சிறந்த நிர்வாக முறைகள் என்ற கையேடு பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் மீன் வளர்ப்பில் தடை செய்யப்பட்ட உயிர்க்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீய விளைவுகள், மீன் குளத்தைப் பற்றிய விவரங்களைக் குறித்து வைக்கத் தேவையான குறிப்புப் புத்தகம், போன்றவையும் வழங்கப்பட்டது.

திரு.சிதாநாத் பெகரா, கூடுதல் உதவி மீன்வள அதிகாரி, மீன் வளத்துதுறை அதிகாரி, கேந்திரப்பாரை, நிறைவு விழாவின் போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் பேசும் போது மாநில மீன்வளத்துறையின் திட்டங்களையும், சி.எ.எ. பதிவு செய்யும் முறைகளையும் விளக்கினார். பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்டது.

திரு.நாராயன் ஹால்தார், முன்னணி விவசாயி இது போன்ற பயிற்சி வகுப்பிற்கு ஏற்பாடு செய்த எம்.பி.இ.டி.எ.விற்கு நன்றி கூறினார். இந்த பயிற்சியில் 20 எஸ்.சி./எஸ்.டி பிரிவினர் கலந்து கொண்டனர். மேலும் இந்த பயிற்சியின்போது பயிற்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கலந்துரையாடல் நடைபெற்றது. பயிற்சியாளர்களின் சந்தேகங்களுக்கு அதிகாரிகள் தகுந்த விளக்கங்களை அளித்தனர்.

திரு.சுரேஷ் மொகாண்டி, லாஸ்கார், மண்டலப் பிரிவு, புவனேஷ்வர் நன்றி கூறினார்.

# அதிகப்படியான மீன்பிடித்தலால் உலக அளவில் பாதிப்பு

கடல் மற்றும் உள்நாட்டு மீன்பிடித்தலின் கணக்கெடுப்பில் உலக அளவில் மிகவும் அதிகமான அளவில் மீன்கள் பிடிக்கப்படுவதால் மீன் வரத்து மிகவும் குறைந்து வருவதாக அமெரிக்காவின் உணவு மற்றும் வேளாண் நிறுவனம் (Food and Agriculture Organization) அறிவிக்கின்றது. மேலும் இந்த நிறுவனம் வெளியிட்ட உலக அளவிலான மீன்பிடித்தல் மற்றும் மீன்வளர்த்தலின் நிலை என்ற 2016 ஆம் ஆண்டு பதிப்பில், பிடிக்கப்படும் மீன்களின் உற்பத்தி அளவு 2025 ஆம் ஆண்டில் ஒரு சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கின்றது. ஏனென்றால் கடல் மீன்கள் யாவும் ஒட்டு மொத்தமாக பிடிக்கப்பட்டதால், மீன் வளம் பெருகும் வாய்ப்புகள் அருகிப் போயின. பிடிபடும் மீன்கள் குறைகிறது, ஆனால் அதற்கான செலவுகள் கூடி வருவதால் இந்தியா போன்ற நாடுகளில் லட்சக்கணக்கான மீனவர்கள் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர். மீன்பிடித்தல் மற்றும் மீன் வளர்ப்பு என்பது, முக்கியமான உணவு, ஊட்டச்சத்தின் தேவை, வருமானம் மற்றும் வாழ்க்கைமுறை என்று பலரின் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும் ஒரு துறையாகத் திகழ்கிறது.

உலக அளவில் மீன் கிடைத்தலின் அளவு என்பது 2014ஆம் ஆண்டின் கணக்குப்படி ஒரு நபருக்கு 20 கிலோவாக உயர்ந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் மக்கள் அதிக அளவில் மீன்வளர்ப்பில் ஈடுபட்டதாகும். இதனால் மட்டும் மனித தேவையின் அரைப் பங்கு பூர்த்தியாகிறது. மேலும் மீன்வளர்ப்பதில் ஏற்பட்டுள்ள நவீனமான தொழில் நுட்பங்களாலும் இந்த அதிகரிப்பு சாத்தி யமாகிறது. உலக அலவிலான மொத்த மீன்பிடிப்பின் அளவு 2014ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 4.6 மில்லியனாகும். இது 2012ஆம் ஆண்டின் கணக்கை ஒத்து வருவதாகும். உலக அளவில் மீன்பிடிப்பதில் ஈடுபட்ட கலங்களின் அளவு அதிகமாக இருப்பது ஆசியாவிலாகும். இது உலக அளவில் 75 சதவீதமாகும்.

2003 முதல் 2009 வரை பிடிபட்ட மீன்களின் அளவு ஒரே நிலையில் உள்ளது. இறுதியாக 2010 முதல் ஒவ்வொரு வருடமும் கணிசமான அளவில் வளர்ச்சி இருந்தது, 2014ல் உலக அளவிலான மீன்பிடிப்பு என்பது 78.4 மில்லியன் டன்னாக இருத்தது.

*- www.financialexpress.com*

# வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்ள மீனவர்களுக்கு உதவும் செயலி

மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை இடைத்தரகர்கள் இல்லாமல் வாடிக்கையாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் விதத்திலான மின்-வர்த்தக வலைதளம் மற்றும் மொபைல் செயலியை மத்திய கடல் மீன்பிடிப்பு ஆராய்ச்சி நிறுவனம் (சி.எம்.எஃப்.ஆர்.ஐ) அமைத்துள்ளது.

இந்த செயலியின் பெயர் marinefishsales என்பதாகும். கடற்கரை சார்ந்துள்ள மக்களின் வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன் சி.எம்.ஆர்.ஐ. National Innovations on Climate Resilent Agriculture என்ற திட்டத்தின் கீழ் உருவாக்கியுள்ளது. இந்த திட்டத்தின் முதன்மை ஆய்வாளாரான திரு.பி.யு.சகாரியா கூறும் போது, இத்திட்டம் துவக்கத்தில் எர்ணாகுளம் மாவட்டத்தில் மட்டும் சோதனை முயற்சியாகச் செய்துபார்க்கப்பட்ட பிறகு இது பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தப்படும் என்று கூறினார். இதில் பணம் செலுத்தி மீன்களைப் பெற்றுக் கொள்ளும் முறை பின்பற்றப்படும். இதில் வரும் லாபத்தை மீனவர்களை நேரடியாகத் தங்களுக்குள் பிரித்துக் கொள்ளலாம். இதனால் இடைத் தரகர்களின் குறுக்கீடும் அவர்களுக்குப் பணம் தரவேண்டிய அவசியமும் இல்லாமல் போகிறது. இதில் சி.எம்.எஃப்.ஆர்.ஐ. நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும்.

ஆன்லைன் மூலமாக மீன்களை விற்பனை செய்ய விரும்பும் மீனவர்கள், தங்களுக்குள் சுய உதவிக் குழு ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும். இது போன்ற பல சுய உதவிக் குழுக்கள் ஒன்றிணைந்து விற்பனை மையமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதன் மூலமாக தங்களிடமுள்ள மீன்களை விநியோகம் செய்து இருப்பு நிலையைக் கண்காணித்துக் கொள்ளலாம்.

இதற்காக மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்பவர்களுகு மின் வர்த்தகம் தொடர்பான பயிற்சியை சி.எம்.எஃப்.ஆர்.ஐ. வழங்கி மாதிரி விற்பனையைத் துவக்கி வைத்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் மின் வர்த்தகத்திற்கான வலைதளத்தையும், மொபைல் செயலியையும் உருவாக்கிய திரு. ரோஜித், ஆராய்ச்சி உதவியாளர் கூறும் போது, இதன் மூலமாக இதனைப் பயன்படுத்துவோர்க்கு தனிப்பட்ட குறியீட்டு அடையாளம் தரப்படும். இதனைப் பயன்படுத்தி மீனவர்கள் தங்களிடமுள்ள மீன்களின் வரத்து குறித்த தகவல்களை அவ்வப்போது புதுப்பித்துக் கொள்ள முடியும் என்றார்.

*- www.thehindubusinessline.com*



# மீனவர்களுக்கு சி.எம்.எஃப்.ஆர்.ஐ பயிற்சி

நீளப் புரட்சியில் சாதனை செய்யும் முயற்சியில் சி.எம்.எஃப்.ஆர்.ஐ. இந்தியக் கடல் பகுதிகளில் திறந்த கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பதற்கான பயிற்சியை மீனவர்களுக்குத் தரவுள்ளது. கடலில் பிடிக்கப்படும் மீன்களின் வரத்தில் தேக்க நிலை இருப்பதால், மீன் வளத்தை அதிகப்படுத்தி, பெருகி வரும் தேவையைச் சமாளிப்பதற்காக சுமார் 5000 மீனவர்களுக்கு இந்தியாவின் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ள மாநிலங்களில் முறையான பயிற்சி தரப்படும். இந்த பயிற்சிக்காக தேசிய மீன்வள அபிவிருந்தி வாரியம் ரூபாய் ஒரு கோடி நிதியை ஒதுக்கியுள்ளது.

திரு.எ.கோபாலகிருஷ்ணன், இயக்குனர், சி.எம்.எஃப்.ஆர். ஐ. இது குறித்து கூறும்போது, கூண்டுகளில் மீன் வளர்க்கும் முறையால் இயல்பாக குளங்களில் வளர்ப்பதைவிட 70 மடங்கு உற்பத்தி அதிகமாக கிடைக்க வாய்ப்புகள் உள்ளதெனக் கூறினார். சாதாரணமாக குளங்களில் வளர்க்கப்படும் மீன் ஒரு ஹெக்டருக்கு 5000 கிலோ கிடக்கும் போது கூண்டு முறையில் ஒரு ஹெக்டருக்கு 35,000 கிலோ கிடைக்கும் என்றார்.

இந்த கூண்டு மீன் வளர்ப்பிற்கான மீன் குஞ்சுகள் கிடைப்பது அரிதாக இருப்பதால் நல்ல ரக குஞ்சுகளை வளர்க்க தேசிய மீன்வள அபிவிருந்தி வாரியம் ரூபாய் ஒன்பது கோடி நிதி உதவி வழங்கியுள்ளது என்றார்.

திரு.எஸ்.மகேஷ், துணை இயக்குனர், இந்த பயிற்சி முகாமைத் துவக்கி வைத்து பேசும் போது, கேரள மாநில மீன் வளர்ப்புத்துறை, சி.எம்.எஃப்.ஆர்.ஐ.யின் ஆதரவுடன் கேரளக் கடற்கரைப் பகுதிகளில் கூண்டு முறை மீன் வளர்ப்பை விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

சி.எம்.எஃப்.ஆர்.ஐ.யின் கடல்மீன் வளர்ப்புத் துறை இந்த பயிற்சி வகுப்பை ஒருங்கிணைத்து வருகிறது. இத்துறையின் தலைவரான இமெல்டா ஜோசப் நாட்டில் பெருகி வரும் மீன் தேவையைச் சமாளிக்க இது போன்ற கூண்டு முறை மீன் வளர்ப்பு சரியான மாற்று வழியாகும் என்றார். வரும் 2030ஆம்ன் ஆண்டில் மீனின் பயன்பாடு வளர்ந்து வரும் நாடுகளில் 57 சதவீதமாகவும், வளர்ந்த நாடுகளில் நான்கு சதவீதமாகவும் இருக்கும்.

கூண்டு முறை வளர்ப்பிற்கு ஏற்ற மீன் ரகங்கள், கடல் விறால், SEABASS, GROUPERS, SNAPPERS, MULLET, LOBSTER, மற்றும் PEARLSPOT போன்றவையாகும். நாட்டில் National Mariulture Policy செயல்பாட்டிற்கு வரும் போது கடல் கூண்டு மீன் வளர்ப்பு முறை எதிர்காலத்தில் அதிக முக்கியத்துவம் பெறும் என்பது உறுதி.

*- www.thehindubusinessline.com*



# ஒடிசா மீனவர்களைக் கவர்ந்த
# ஜிலேப்பி கெண்டை மீன்



ஒடிசா மாநிலத்தில் மரபணு சீராக்கத்தில் வளர்க்கப்பட்ட ஜிலேப்பிக் கெண்டை மீன் வளர்ப்பவர்களின் அபிமானம் பெற்றுள்ளது. சுத்த நீரில் வளர்க்கப்டும் இந்த மீனில் அதிகமான புரோட்டின் சத்து உள்ளது. இதை வளர்ப்பவர்களுக்கு அதிகமான வருமானத்தைத் தருவதாகும். இதனால் இந்த மீனை வளர்க்க பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஒடிசா மாநிலத்தின் மீன்வளர்ப்புத் துறை உலக மீன் நிறுவனத்தின் ஆதரவுடன் ஜிலேப்பி கெண்டை மீன் அபிவிருத்தி யில் ஈடுபட்டுள்ளது. இந்த திட்டம் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், மீன் வளர்ப்பவர்களின் வருமானத்தைப் பெருக்கவும் உதவும் என்றும் இது விரும்பத்தக்க நல்லவிதமான விளைவுகளைத் தரும் திட்டமாக இருக்கும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பாக இந்தத் திட்டம் ஆரம்ப முயற்சியாக கட்டாக் மாவட்டத்தில் நிசிண்டாகொய்லி என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. அங்கு இரண்டு விவசாயிகள் 80 டெசிமல் நிலத்தில் இதனைத் தொடங்கினர். இவர்களுக்கு 0.14 கிராம் எடையுள்ள மீன் குஞ்சுகள் தரப்பட்டது. இது ஐந்து மாதங்களில் 850 கிராம் எடையுள்ளதாக வளர்ந்தது. இரண்டு விவசாயிகளுக்கும் அமோகமான வருமானம் கிடைத்தது.

இந்த இரண்டு விவசாயிகளின் வெற்றியைக் கேள்விப்பட்டதும் ஏழு மாவட்டங்களிலிருந்து 30ற்கும் மேலானவர்கள் இந்த மீனை வளர்க்க முற்பட்டனர். இந்த ரக மீன் குறுகிய காலத்தில் அதிகமான பலன் தருவதாகும். மேலும் இதற்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு ஏக்கர் அளவுள்ள குளத்தில் சுமார் 3000 கிலோ அளவுள்ள மீன்களை வளர்க்க முடியும். இதற்காகும் செலவு 1.80 லட்சம். ஆனால் இதில் கிடைக்கும் வருமானம் சுமார் மூன்று லட்சமாகும். எனவே ஒரு ஏக்கரில் 1.20 லட்சம் லாபம் கிடைக்கும். மேலும் இந்த வருமானம் நான்கு முதல் ஐந்து மாதங்களில் என்பதும் கவனிக்கத்தக்கதாகும். ஒரு வருடத்தில் இரண்டு முறை மீன் பிடிக்கலாம் என்று திட்ட மேலாளர் திரு.அருண் படியார் கூறினார்.

தற்போதுள்ள மீன் வளர்ப்பைவிட ஜிலேபி கெண்டை வளர்ப்பில் கிடைக்கும் லாபம் அதிகமாகும். மேலும் இந்த மீனில் ஒரே எலும்புடன் அதிக சதைப்பற்றுள்ள சத்துள்ள மீன் என்பதால் பொதுமக்களும் விரும்புகின்றனர். இதன் சிறப்புத் தன்மைகளை எடுத்துக் கூறி மீனவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றோம். இதன் அதிகமான வருமானம் நிச்சய மாக மீனவர்களைக் கவரும் என்று படியார் கூறினார்.

# மின் உலர்த்தி வழங்க முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்



*புரிந்துணர்வு ஒப்பந்தத்தை, காசர்கோடு, காளான் வளர்ப்போர் சுய உதவிக் குழுவிற்கு கைமாறும் காட்சி*

கேரளத்திலுள்ள காசர்கோட்டில் காளான் வளர்ப்பு சுய உதவிக் குழுவினருக்கு பத்து கிலோ எடை திறனுள்ள மின்சார உலர்த்தியை ஐ.சி.எ.ஆர் – சி.ஐ.எஃப்.டி. வழங்குவதற்கான முத்தரப்பு ஒப்பந்தம் பிப்ரவரி 1,2018ல் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் Krishi Vigyan Kendra, ICAR - Central Plantation Crops Research Institute, Kasaragod, & Mushroom Cultivators Self Help Group Kasaragod ஆகிய நிறுவனங்கள் இணைந்து ICAR - Central Institute of Fisheries Technology, உடன் ஒப்பந்தம் செய்து கொண்டன.

இந்த மின்சார உலர்த்தியின் மூலமாக மீன் சார்ந்த பொருட்களைப் பதப்படுத்தவும், மதிப்பூட்டம் செய்யவும் மற்றும் பல வேளாண் விளைபொருட்களை இது போல் செய்து கொள்ள பயன்படுத்தலாம். இந்த ஒப்பந்தம் முனைவர்.ஆர்.சந்திரபாபு, துணை வேந்தர், கேரளா வேளாண் பல்கலைக்கழகம், திருச்சூர், முனைவர். சி.என். ரவிசங்கர், இயக்குனர் ஐ.சி.எ.ஆர். – சி.ஐ.எஃப்.டி. கொச்சி, முனைவர்.சுசீலா மேத்யூ, முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைமை, பயோ கெமிஸ்ட்ரி & நியூட்ரிசன் பிரிவு, ஐ.சி.எ.ஆர். – சி.ஐ.எஃப்.டி. கொச்சி, முனைவர். மனோஜ் பி.சாமுவேல், முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் பொறியியல் துறை, ஐ.சி.எ.ஆர். – சி.ஐ.எஃப்.டி. கொச்சி, முனைவர்.டி.எஸ்.மனோஜ் குமார், முதன்மை விஞ்ஞானி, கே.வி.கே. ஐ.சி.எ.ஆர். – சி.பி.சி.ஆர்.ஐ. மற்றும் திரு.பாண்டுரங்கா, காளான் வளர்ப்போர் சுய உதவிக் குழு, காசர்கோடு ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.

# உயிர்க் கொல்லி படிமங்களைத் தவிர்க்கும் பயிற்சி




*பயிற்சியாளர்கள் இயக்குனர் மற்றும் பயிற்சி கொடுத்த வல்லுனர்களுடன்..*

முக்கியமான உணவுப் பொருட்களான மீன், பால், கோழி போன்றவற்றில் உயிர்க் கொல்லியின் அம்சங்கள் இருப்பது இவற்றை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு பெரிய பிரச்சனையாக உள்ளது. இவற்றை உட்கொள்ளும் பொதுமக்களுக்கு பாதகமான விளைவுகள் ஏற்படுகிறது. எனவே, இவற்றைப் பயன்படுத்துவோரின் உடல் நலம் கருதி இவை உணவுப் பொருட்களுடன் கலக்காமல் கண்காணிப்பதும் அதற்கான சோதனைகளை மேற்கொள்வதும் அவசியமாகும். இதற்காக Food Safety and Standard Authority of India ஒரு பயிற்சி முகாமை கொச்சியில் சி.ஐ.எஃப்.டி.யில் பிப்ரவரி 26,2018ல் நடத்தியது. இதில் ஐ.சி.எ.ஆர். – சி.ஐ.எஃப்.டி. , இ.ஐ.எ. மற்றும் கேரள மாநிலத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பத்து பேர் கலந்து கொண்டனர். முனைவர்.மரியல் பிக்கேமட், மற்றும் திருமதி. வில்மா டிரையீசன், ஆகியோர் பயிற்சி கொடுத்தனர். இந்த பயிற்சியில் தியரி மற்றும் செய்முறைப் பயிற்சி போன்றவை கற்பிக்கப்பட்டன.

இந்த பயிற்சியில் உணவுப் பொருட்களில் கலந்துள்ள உயிர்க்கொல்லி அம்சங்களைக் கண்டறிவது எப்படி என்பது விளக்கப்பட்டது. மிருக உணவுப் பொருட்களில் உள்ள உணவுப் பாதுகாப்பு விதிமுறைகள், கலப்புகளைக் கண்டறிதல், உறுதி செய்தல், மற்றும் மதிப்பிடுதல், ஊடகங்களைத் தயாரித்தல், போன்றவை இந்த பயிற்சியின் போது விவாதிக்கப்பட்டது. இதில் பங்கேற்ற பயிற்சியாளர்கள் இந்த பயிற்சியின் மூலமாக பல புதிய யுக்திகளைக் கற்றுக் கொள்ள முடிந்தது. இந்த பயிற்சியின் மூலம ாக தரமான பொருட்களை உற்பத்தி செய்ய இயலும் என்று கூறினர்.

# கடல் இயற்கை தயாரிப்புகள் தைராய்ட் குறைபாட்டை நிவர்த்தி செய்யும்




உடல் ஆரோக்கியம் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பல நோய்களைச் சரியாக்க கடல் சார்ந்த பொருட்களை நம்பி இருக்கும் காலகட்டத்தில் சி.எம்.எஃப்.ஆர்.ஐ. கடலிலிருந்து இயற்கையாகக் கிடைக்கும் ஒரு பொருளிலிருந்து தைராய்ட் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் மருந்தை உருவாக்கியுள்ளது. ஏற்கனவே சி.எம்.எஃப்.ஆர்.ஐ. மருத்துவத் துறையில் நீரிழிவு, மூட்டுவலி, கொழுப்பு சத்து, ஆகியவற்றிற்கு கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் கடல்பாசி மற்றும் பச்சை சிப்பி போன்ற பொருட்களிலிருந்து மருந்துகளைத் தயாரித்துள்ளது.

இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு சி.எம்.எஃப்.ஆர்.ஐ. ஏற்பாடு செய்திருந்த கடல் பொருட்களிலிருந்து மருந்துவ குணங்களைப் பகுத்தறியும் மூன்று நாள் பயிற்சியின் நிறைவு விழாவின் போது முனைவர்.எ.கோபாலகிருஷ்ணன், இயக்குநர், சி.எம்.எஃப்.ஆர்.ஐ. பேசும் போது தைராய்ட் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் மருந்தை சி.எம்.எஃப்.ஆர்.ஐ. உருவாக்கியுள்ளது. இது மருத்துவ பரிசோதனையின் இறுதி கட்டத்தில் உள்ளது. இதன் பயன்பாட்டின் சாதகநிலையை உறுதி செய்த பிறகு பொது பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்யப்படும் என்று கூறினார். மேலும் அவர் கூறும் போது இதே போன்று அழகு சாதனப் பொருட்களின் தயாரிப்பிலும் சி.எம்.எஃப்.ஆர்.ஐ. பொருட்களை உருவாக்கும் முயற்சியில் உள்ளது என்றார். இந்த மருந்தைத் தயாரிக்க வர்த்தக நிறுவனங்களுடன் தேவையான பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும் கூறினார்.

கடல் சார் பொருட்களில் வளர்சிதை மாற்றம் தொடர்பான காரணிகள் அதிக அளவில் இருப்பதால் இயற்கையாகக் கிடைக்கும் இப்பொருட்களுக்கான தேவை அதிகமாக உள்ளது. உண்ணும் உணவில் இயற்கையான ஊட்டச் சத்துக்கள் சேர்ந்திருப்பது மனித உடல் ஆரோகியத்திற்கு மிகவும் உகந்தது என்பது நிரூபிக்கப்பட்டதாகும். சி.எம்.எஃப்.ஆர்.ஐ. இந்தியாவில் கடல் வாழ் பொருட்கள் தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள முன்னணி நிறுவனமாகும். கடல் உயிர்ப் பொருட்களிலிருந்து பல நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளை சி.எம்.எஃப்.ஆர்.ஐ. உருவாக்கியுள்ளது என்று கூறினார்.

முனைவர்.டி.கே.ஸ்ரீனிவாச கோபால், முன்னாள் இயக்குனர், சி.ஐ.எஃப்.டி. சிறப்பு விருந்தினராக இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர் பேசும் போது இந்தியக் கடல் பகுதியில் எண்ணற்ற மருத்துவ குணமிக்க உயிரினங்கள் இயற்கையின் கொடையாக வாழ்ந்து வருகின்றன. எனவே இவற்றை மனித ஆரோக்கியத்திற்காக தேவைப்படும் இயற்கையான மருந்துகள் இது போன்ற ஆராய்ச்சிகளின் மூலம் கிடைக்கும் என்றார். முனைவர்.பி.விஜயகோபால், தலைவர், மெரைன் பயோ டெக்னாலஜி, மற்றும் முனைவர்.காஜல் சக்ரபர்த்தி, பயிற்சி இயக்குனர், ஆகியோர் உரையாற்றினர்.


www.mpeda.gov.in
There's no seafood as Irresistible as Indian Seafood
From the sparkling Indian seas comes the finest seafood in the world. Enjoy it in abundance throughout the year.
You haven't tasted the best seafood, if you haven't tasted Indian seafood.
The Marine Products Export Development Authority
(Ministry of Commerce & Industry, Government of India)
MPEDA House, Panampilly Avenue, Kochi - 682 036, Kerala, India
Phone: +91 484 2311979 Fax: +91 484 2313361 E-mail: ho@mpeda.gov.in